Regiestred as a News Papar in Ceylon விலைசதம் 15

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 8
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் மாசி 8 ஜுல்ஹஜ் 11 வியாழக்கிழமை [19-2-70]

# வடக்கில் இராணுவம் பற்றி நீதி விசாரணைக் கமிஷன் வேண்டும்

## பட்டிருப்பு எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

**"வடக்கு மாகாணத்தில் ராணுவத்தினரின் கடமைகள் என்ன, அவை சரியாக நிறைவேற்றப்படுகின்றனவா, அவர்களின் நடவடிக்கைகள் எப்படிப்பட்டவை, வடக்கில் ராணுவம் இருக்கவேண்டியது அவசியம் தானா? இவை போன்ற கேள்விகளுக்கெல்லாம் சரியான விடை காண்பதற்கு ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதியரசர்களைக்கொண்ட ஒரு விசாரணைக்குழுவை நியமிக்கவேண்டும்"**

இவ்வாறு தமிழ் அரசுக்கட்சித்தலைவரும் பட்டிருப்புப் பிரதிநிதியுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் வல்வெட்டித்துறையில் நடந்த ராணுவத் தாக்குதல் சம்பந்தமாக நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.



ராணுவத் தாக்குதலினால் காயமடைந்த பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. கே. துரைரத்தினத்தைச் சந்தித்த இராசமாணிக்கம் பின்னர் விடுத்த அறிக்கையில் திரு. துரைரத்தினம் ராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம் தனிப்பட்ட ஒருவரின் பிரச்னையல்லவென்றும் இந்த நாட்டில் வாழும் ஒரு பகுதி மக்களின் பிரச்னையென்றும் சொன்னார்.

வடக்கில் ராணுவம் இருக்கத்தான் வேண்டுமென்றால் அது அரசாங்கஅதிபரின் கட்டுப்பாட்டிலிருக்கவேண்டுமென்றும் பொலிசாருக்குப் போல் ராணுவச் சிப்பாய் ஒவ்வொருவருக்கும் இலக்கம் வழங்கப்படவேண்டுமென்றும் திரு. இராசமாணிக்கம் கூறினார்.

வடபகுதித் தமிழ் மக்களை இழிவுபடுத்துவதற்கும் இம்சைப்படுத்துவதற்குமே இங்கு ராணுவம் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

# மார்ச் 4-ல் கச்சதீவு திருநாள்

# 1-ம் தேதி, முதல் கோஷ்டி செல்லும்

## கள்ளக்கடத்தல், சட்டவிரோத குடியேற்றத் தடுப்பு தீவிரம்

யாழ்ப்பாணம். வியாழன்

**கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் 4-ந்திகதி அரம்பமாகிறது. இதற்காக கச்சதீவுக்கு செல்வதற்கு யாத்திரீகர்கள் ஆயத்தம் செய்யும் அதே சமயம் கள்ளக் கடத்தலையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதற்கான கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கடற்படை, இராணுவம், பொலிஸ், விமானப்படை, சுங்கப்பகுதி ஆகியவைகளும் ஆயத்தம் செய்துவருகின்றன.**

மார்ச்மாதம் 4ந்திகதி தான் மகோற்சவம் ஆரம்பமாகவிருந்தாலும் ஆலய ஊழியர்கள் மற்றும் யாத்திரிகாசளின் முதல்கோஷ்டி மார்ச் மாதம் முதற் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து

கச்சதீவு செல்லும் யாத்திரீகர் 8ந்திகதி காலைக்குமுன் அங்கிருந்து தங்கள் இடங்களுக்குத் திரும்பிவிடவேண்டும்.

சென்றவருடம்போல் கள்ளக்குடியேற்ற, கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரவாக நடைபெறுமென்றும் அறியப்படுகிறது.

## அனுராதபுரம் மீண்டும் தலைநகராக வேண்டுமாம்

### மிகிந்தலை எம், பி. கொண்டுவரும் பிரேரணை

கோட்டை, புதன்

அனுராதபுரத்தைப் புராதன காலத்தில் இருந்தது போல் இலங்கையின் தலைநகராகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று மிஹிந்தலை எம். பி. திரு. பி. எம். கே. தென்னக்கூன் பிரேரணையொன்றை ஆட்சிமன்றத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்

சிங்கள அரசர்களின் ஆட்சிக் காலத்தில் அனுராதபுர நகரைத் தீவின் தலைநகராகக்கொண்டு தங்கள் கடமைகளை அங்கிருந்தே ஆற்றிவந்ததன் காரணமாக இத்தீவு கிழைத்தேயங்களின் தானியக்களஞ்சியம் எனப்புகழ் பெற்றிருந்ததாலும் வெளிநாட்டுப் படையெடுப்புகளின் விளைவாக எமது நாட்டின் தலைநகரம் புல் வேறு நகரங்களுக்கு மாற்றப்பட்டு ஈற்றில் கொழும்பில் அமைந்துள்ளதாலும், இற்றைவரை இந்நாட்டின் முன்னேரளித்த தேசிய, சமய, பண்பாட்டுச் செல்வங்களை எடுத்துக்காட்டும் நகரமாக அனுராதபுரம் திகழ்வதாலும், அந்நகரம் மீண்டும் இலங்கையின் தலைநகரமாக்கப்படுவதுடன், மகாதேசாதிபதியினதும் பிரதம அமைச்சரினதும் உத்தியோக வாசஸ்தலங்கள், பிரதிநிதிகள் சபை, செனட் சபை ஆகியவை உட்படத் தற்போதைய நிருவாக நிலையங்கள் அனைத்தும் அங்கேயே நிறுவப்படவேண்டுமெனவும் திரு. தென்னக்கூன் தமது பிரேரணையில்

## சுங்கப்பகுதி வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சுங்கப் பகுதி திருட்டு சம்பந்தமாக நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு டயஸ் முன்னிலையில் பொலிசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

தல்காது தர்மதாசா, ரஞ்சித்பெரேரா, தயானந்த பெரேரா ஆகிய நால்வர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எதிரிகள் சார்பில் புரக்டர் ஏ. அன்ரனி ஆஜரானர். மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை மார்ச் மாதம் 2-ம் தேதிக்கு ஒத்திப்போட்டார்.

## புதிய மந்திரிகள்

புதுடில்லி, பெப். 18

மத்திய அரசின் புதிய மந்திரிகளாக திரு. நந்தா, திரு. சஞ்சீவையா ஆகிய இருவர்களும் இன்று பதவி

## 'வடக்கிலும் கிழக்கிலும் சம அந்தஸ்து கிடைத்தது'

யாழ்ப்பாணம், வியாழன்

வடக்கு-கிழக்கும் மாகாணங்களில் இப்போது சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து கிடைத்துள்ளன. இதர மாகாணங்களிலும் இந்த சம அந்தஸ்து கிடைக்கும்வரை தமிழ் அரசுக்கட்சி ஓயாது' என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் வட்டுக்கோட்டை பிரதிநிதியுமான திரு அ அமிர்தலிங்கம் நேற்றுமுன்தினம் மாலை சுந்தர்மடத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

சிங்களம்மட்டும் சட்டமும் நியாயமான அளவு தமிழ் மொழி உபயோகச் சட்டமுமேயாகுமென்றார். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழும் சிங்களமும் சமஅந்தஸ்துப் பெற்றுவிட்டன. இதர மாகாணங்களிலும் இருமொழிகளும் சம அந்தஸ்து பெறவேண்டும் என்று அவர் சொன்னர்

திரு எஸ் ஜே வி செல்வநாயகம் பேசுகையில், அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி மூன்றுவருடகாலம் சேர்ந்திருந்தபோது வடக்கே சிங்களத்தைத் திணிக்கமுடியாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...கிழைத்தேயங்களின் தானியக்களஞ்சியம் எனப்புகழ் பெற்றிருந்ததாலும் வெளிநாட்டுப் படையெடுப்புகளின் விளைவாக எமது நாட்டின் தலைநகரம் பல்...

...யவை உட்படத் தற்போதைய நிறுவாக நிலையங்கள் அனைத்தும் அங்கேயே நிறுவப்படவேண்டுமெனவும் திரு. தென்னக்கூன் தமது பிரேரணையில் குறிப்பிட்டுள்ளார்.

# மருந்துக்குறிப்பு பற்றி டாக்டர்களுக்கு அமைச்சு

கோட்டை, புதன்

'திரும்பவும் அதையே பாவிக்கவும்' என நோயாளிகளுக்கு டாக்டர்களால் வழங்கப்படும் மருந்து குறிப்பு பட்டியலில் இனிமேல் குறிப்பிடக்கூடாது என சுகாதார உதவி அதிபர் டாக்டர். கே. டீ. எப். பிலசீலி வைத்திய அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளா.

நோயாளிகளுக்கு முதல் தடவையாக வழங்கப்பட்ட மருந்தையே திரும்பவும் டாக்டர்கள் நோயாளிகளுக்கு கொடுக்கவேண்டி ஏற்படின் 'திரும்பவும்' எனஎழுதிக்கொடுத்து விடுகிறார்கள். இதனால் மருந்து விற்பனையாளர்களும் மருந்துபற்றி தெரியாத நோயாளிகளும் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள் எனப் புகார்தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்தே மேற்படி நடவடிக்கையைச் சுகாதார அமைச்சு எடுத்துள்ளது.

இனிமேல் டாக்டர்கள் ஒவ்வொருதடவையும் புதிய மருந்துக்குறிப்பையே எழுதிக்கொடுக்கவேண்டும் அதாவது 'திரும்பவும் பாவிக்கவும்' என எழுதக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது

கச்சியப்ப சிவாசாரியார் குருபூசையை

# சுழிபுரத்தில் நடத்த தீர்மானித்ததற்கு காரணம்

சுழிபுரம், புதன்

''மூர்த்தி-தலம்- தீர்த்தம் விசேஷ அமைவுகள் பெற்ற இக்கிராமத்தில் சைவரைவிட வேறொரு மதத்தினரும் ஒ காலத்திலுமில்லை. இக்கிராம வடகீழ் திசையில் சிவனும் அம்மையும், வடபகுதியில் ஐமுகனும், ஆறுமுகனும், கோவில் கொண்டெழுந்தருளியிருக்கிறார்கள். தெற்கில் அறுபத்துமூவர் குருபூசை மடதும், மேற்குப்பக்கத்தில் 'திருவடிநிலை' என்கின்ற திவ்விய தீர்த்தமும் இருக்கின்றன. சிவசுப்பிரமணியப் பெருமான் 1768ம் ஆண்டு பறுளையில் எழுந்தருளினார். இக்கோயில் கந்தபுராணப்படிப்பால் உண்டானது. இதனால் தான் இக் குருபூசையை இங்கு செய்யத் தீர்மானித்தோம்''.

இவ்வாறு யாழ் சைவசித்தாந்த சங்க ஆதரவில் சுழிபுரம் பறுளையில் நடைபெற்ற கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூசைத்தினத்தன்று திரு நா சேனாதிராசா தமது தலைமையுரையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

கச்சியப்பசிவாசாரியார்

''திகடசக்கரச் செம்முகமைந்துள்ளான்'' என அடி எடுத்து கந்தபுராணத்தை பாடினார். அதை அரங்கேற்ற சபையைக் கூட்டியபோது அவர்கள் 'திகடசக்கர' என்னும் பதத்திற்கு சரியான இலக்கணம் கூறினாலன்றி நூல் அரங்கேற்றம் செய்யப்பட மாட்டாது எனக் கூறினார்கள் கச்சியப்பர் கவலையோடு இறைவனைத் தியானித்தார். இறைவன் சந்நியாசி வேடத்துடன் வந்து 'வீரசோழியம்' என்ற இலக்கணநூலை அத்தாட்சிப் படுத்தியதுடன் கந்தபுராணநூலை அரங்கேற்றச் செய்தார். ஆதலால் இறைவனை உள்ளன்போடு வணங்குபவர்களுக்கு திருவருள் கிடைப்பது வெகு இலகு. ஆன்மஈடேற்றம் ஆண்டவனிடம் பெற்றாலன்றி மானிடசென்மம் எடுத்தும் பயனில்லை. எனவே இக்குருபூசையை ஒவ்வொரு வருடமும் செய்யத் தீர்மானித்துள்ளோம். ஆம் பொருள் நமதேயானால் அறம் பிறர்க்காவதுண்டோ''.

## இடமாற்றம்

சுழிபுரம், புதன்

சைவப் புலவர் நா. க. தங்கரத்தினம் ஆசிரியர் கொழும்பு வத்தளை ரோமன் கத்தோலிக்க தமிழ்கலவன்' பாடசாலையிலிருந்து இம் மாதம் முதல் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## புதிய மந்திரிகள்

புதுடில்லி, பெப். 18

மத்திய அரசின் புதிய மந்திரிகளாக திரு. நந்தா, திரு. சஞ்சீவையா ஆகிய இருவர்களும் இன்று பதவி ஏற்றனர். திரு. நந்தா ரயில்வ மந்திரியாகவும், திரு. சஞ்சீவையா தொழிலாளர் நல மந்திரியாகவும் பதவி வகிப்பர்.

...தான் மகோற்சவம் ஆரம்பமாகவிருந்தாலும் ஆலய ஊழியர்கள் மற்றும் யாத்திரிகர்களின் முதல்கோஷ்டி மார்ச் மாதம் மூதற் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கச்சதீவுக்குப் புறப்பட்டுச் செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது. 7ந் திகதி திருச்சொரூப சுற்றுப்பிரகாரம் நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து ...கள் 8ந் திகதி காலைக்குமுன் அங்கிருந்து தங்கள் இடங்களுக்குத் திரும்பிவிட வேண்டும்.

ரஷ்யாவுக் கெதிராக

# சீனர்கள் போருக்கு ஆயத்தமாகிறார்களாம்

மாஸ்கோ, பெப். 18

சோவியத் யூனியன்மீது போர் தொடுப்பதற்காக சீன ஆட்சியாளர்கள் எரிபொருள்களையும் மூலப் பொருட்களையும் ஏராளமாக சேகரித்து வைப்பதாக 'டாஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

மாசேதுங்கும் அவரது சகபாடிகளும் சீனமக்களை ஏமாற்றிக்கொண்டுசோவியத்யூனியன்மீது போர் தொடுக்க ஆயத்தம் செய்துவருகிறார்களென்று 'டாஸ்' செய்தி கூறுகின்றது.

அத்தியாவசியப் பொருட்களையும், உணவுகளையும் பதுக்கிவைத்துவிட்டுநாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக சீனத்தலைவர்கள்மக்களிடம் கூறுகிறார்களென்று 'டாஸ' குறிப்பிட்டுள்ளது.

விஸ்வமடு விவசாய முகாம்

# சீமெந்துச் சாலை தீக்கிரையானது

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு விவசாயப் படை சீமெந்துச்சாலை இன்று அதிகாலை தீக்கிரையானது. இதனால் இங்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 15,000 ரூபாய் பெறுமதியான சீமெந்து சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப் பட்டது.

இரவு காவலாளி தமது கடமைமுடிந்து வீட்டுக்குச் சென்றபின்னரே இந்தத்தீவிபத்து ஏற்பட்டதாம் இவ் விபத்தை தொடர்ந்து முகாம் வீரர்கள் ஒருவாரத்துக்கு வெளியில் நடமாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ் உத்தரவை முகாம் பொறுப்பதிகாரி திரு என். விஸ்வநாதன் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சிப் பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்துள்ளனர்.

# பிற மாகாணங்களிலும் காங்கிரஸ் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தை தவிர வடமாகாணத்தில் மற்றும் தொகுதிகளில் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் அடுத்த தேர்தலில் போட்டியிட இரண்டுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருப்பதாக தமிழ்காங்கிரஸ்அபேட்சகர் நியமன குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அபேட்சகர் பட்டியல் அடுத்தமாதம் வெளியிடப்படுமென்றும் வடக்கு மாகாணத்தில் சில தொகுதி அபேட்சகர்கள் பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலும் சில தொகுதிகளில் போட்டியிட சிலர் விரும்புவதாகவும் இதுபற்றி இம்மாத இறுதியில் கிழக்கு மகாணத்திற்கு விஜயம் செய்து முடிவு எடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

கூடிய விரைவில் அபேட்சகர் பட்டியலை வெளியிடும்படி பல கிளைகள் தமிழ் காங்கிரஸ் தலைமைப் பீடத்தைக்கோரியிருப்பதாகவும் தெரியவருகிறது.

...ளக்குடியேற்ற, கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரவாக நடைபெறுமென்றும் அறியப்படுகிறது.

# கூட்டு ரோந்தில் ராணுவத் தளபதி திருப்தி

## வடக்கே வந்து திரும்பினார்

யாழ்ப்பாணம், வியா

இராணுவத்தளபதிமேஜர் ஜெனரல் சேபால அட்டிகல வடபகுதிக்கு விஜயம் செய்து இராணுவ முகாம்கள் எலவற்றுக்கும் சென்று பார்வையிட்டார். வடபகுதிக் கரையோரப்பகுதிகளில் இப்போது இராணுவத்தினர் பொலிசாருடன் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதையிட்டு இராணுவத்தளபதி திருப்தி தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

பலாலி, வல்வெட்டித்துறை, மாதகல் போன்ற இடங்களிலுள்ள இராணுவ முகாம்களுக்குச் சென்று பார்வையிட்ட தளபதி அங்குள்ள இராணுவத்தினர் மத்தியில் சில வார்த்தைகள் பேசியதாகவும் அறியப்படுகிறது.

இராணுவத்தினரும்பொலிசாரும் கூட்டாக ரோந்து நடவடிக்கையிலீடுபட்டாலும் இராணுவத்தினரே அதிகஅளவிலிருப்பார்கள் என்றும் இராணுவத்தினருடன் கள்ளக்கடத்தல் சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கென ஒவ்வொரு முக்கிய பொலிஸ் நிலையத்திலிருந்தும் இதற்கென ஐந்து அல்லது ஆறு பொலிஸ்காரர்களைக் கொண்ட தனிப்பிரிவு அமைக்கப்படவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

இராணுவ பொலிஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியபின் தளபதி சேபால அட்டிகல நேற்று மாலை கொழும்பு திரும்பினார்

# 'மனிதருக்குள் உயர்வு தாழ்வு கிடையாது'

கோப்பாய், வியாழன்

'மக்கள் சமஉரிமைகளுடனும், கௌரவத்துடனும் வாழவேண்டும். இவ்வெண்ணம் ஒவ்வொருவர் மனதிலும் உதயமாதல்வேண்டும். இந்த இலட்சியம் நிறைந்த உயர்ந்த எண்ணமே ஒருதத்துவமாகும். மனிதருக்குமனிதர் சமூகத்திலோ சாதியிலோ உயர்வுதாழ்வுபெற்றவர்களல்ல' மேற்கண்டஎண்ணம் நமது காலத்திலே உதித்த புதுஎண்ணம். இந்நாட்டிலே சட்டம், அரசாங்கம், கல்வி ஆகியவற்றிலே சரிசமமான உரிமை மனிதகுலத்துக்குண்டு என்பதை அனைவரும் உணருதல் அவசியம்.

மேற்கண்டவாறு வலிகிழக்கு காரியாதிகாரி பிரிவினரால் நடாத்தப்பட்ட மனித உரிமைத் தினவிழாவில்பேசுகையில் பேராசிரியர் திரு. கே. நேசையா கூறினார்,

இவ்விழாகோப்பாய்கிறிஸ்தவகல்லூரி மண்டபத்தில் வலி.கிழக்கு காரியாதிகாரி திரு.வி.கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

திரு. நேசையா தொடர்ந்து பேசுகையில், 'மாணவர்கள் காந்தீய வழியிலே வாழப் பழகவேண்டும் சர்வோதய இயக்கத்தை வளர்த்து அதன் மூலம் அயலிலுள்ள கிராமத்தில் தொண்டு செய்து சமூக சீர்திருத்தம் ஏற்பட வழிகாணுதல் அவசியம்' என்றார்.

அடுத்து வட்டார வித்தியாதிகாரி திரு. வி. சண்முகநாதன் பேசினார்.

கிராமாபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. கே. எஸ். முத்துவேலு நன்றி கூறினார்.

இன்று

## பருத்தித்துறை எம். பி. உரையாற்றுவார்

வல்வெட்டித்துறை, வியாழன்

இராணு தாக்குதலுகள்ளாகி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் இன்று பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபேறும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

...வட்டுக்கோட்டை பிரதிநிதியுமான திரு அ. அமிர்தலிங்கம் நேற்றுமுன்தினம் மாலை கந்தர்மடத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு ஆர் ஸி மன்மதராயன் தலைமையில் நடந்தஇக் கூட்டத்தில் திரு அமிர்தலிங்கம் பேசுகையில் 1961-ம் ஆண்டில் தமிழரசுக்கட்சியினர் நடத்திய சத்தியாக்கிரகத்தின் விளைவாக சிங்களம் மட்டும் சட்டம் அமுல் நடத்தமுடியாது போய்விட்டதென்றும் இப்போதிருப்பது

திரு எஸ் ஜே வி செல்வநாயகம் பேசுகையில், அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி மூன்றுவருடகாலம் சேர்ந்திருந்தபோது வடக்கே சிங்களத்தைத் திணிக்கமுடியாதிருந்த கல்வி அமைச்சர் இப்போது பௌத்தபாடசாலைகளின் பெயரால் சிங்களத்தை திணிக்க முயல்கிறாரென்றும் இதற்கு விட்டுக்கொடுத்தால் இது மேலும் பரவிவிடுமென்றும் கூறினார்

திரு எஸ் எம் இராசமாணிக்கம் உட்பட வேறுபலரும் பேசினர்.

# "தமிழர் இருக்கும்வரை உரிமைக்காகப் போராடுவர்"

## —எஸ். ஜே. வி.

யாழ்ப்பாணம், வியா.

'தமிழர் இந்நாட்டில் இருக்கும்வரை தங்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கு முயற்சி எடுத்தபடியே இருப்பார்கள். ஆகையினால் நீங்கள் தமிழில் உடனடியாக தேர்வுகளை வைப்பதற்கு ஒழுங்கு செய்யுங்கள். அத்துடன் தமிழில் வகுப்புகளை நடாத்துவதற்கு திட்டம் இட்டு செயல்படுங்கள்.

வங்கியாளர்பயிற்சிநிலையத் தலைவருக்கு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில்மேலும்கூறப்பட்டிருப்பதாவது: வங்கியாளர் பயிற்சித்தேர்வை தமிழில்எடுக்கவிரும்புவதாகவும் ஏறக்குறைய 200 பேர் கோரியுள்ளனர் என்று அறிகிறேன். உங்கள் நிறுவனத்தின்தேர்வு வரும் மேமாதத்தில் நடைபெற விருப்பதாக அறிகிறேன். இதற்குரிய விண்ணப்பங்களை சென்ற ஜனவரி 31க்குள் கோரியிருக்கவேண்டும். அது நடைபெறவில்லை. காலம் தாமதியாது தமிழில் தேர்வை நடாத்துவதற்குரிய பாடத்திட்டங்களை வெளியிடுவதோடு விண்ணப்பங்களை தமிழ் பரீட்சார்த்திகளிடம் இருந்து உடனடியாகக் கோருமாறுவேண்டுகிறேன். வகுப்புக்களை நடாத்துவதில் தாமதம் ஏற்படின் உடனடியாகமே மாதம் நடைபெற வேண்டிய தமிழ் தேர்வுக்கு ஏற்ற ஒழுங்குகளைச்செய்யுங்கள்.

## 'ஜீப்' புரண்டு சிப்பாய் படுகாயம்

யாழ்ப்பாணம், வியா.

பலாலி இராணுவமுகாமைச்சேர்ந்த புஞ்சிபண்டா என்ற சிப்பாய் ஓட்டிவந்த இராணுவ ஜீப் நேற்று வசாவிளான் சந்திக்குச் சமீபத்தில் குடைசாய்ந்ததில் புஞ்சிபண்டா பலத்தகாயமடைந்தார்.

தலையிலும் உடலிலும் பலத்த காயமடைந்த புஞ்சிபண்டா யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். நேற்றிரவு வரை அவர் மயக்கம் தெளியாதிருந்தார்

# நாச்சிமார் கோவிலடி கொலை வழக்கு

## இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா.

நாச்சிமார் கோவிலடி கொலைவழக்கு நேற்று மூன்றுவது தினமாக விசாரணை செய்யப்பட்டபோது இன்ஸ்பெக்டர் டயஸ் சாட்சியமளித்தார்.

இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் திரு சி. ஜி. வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணையைப் பார்ப்பதற்காககோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ் வழக்கில் நாச்சிமார் கோவிலடியில் 68-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் தேதி வி. மதியாபரணம் என்பவரை கொலை செய்ததாக ஏ, பத்மநாதன் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

எமது ஸ்தாபனத்தில் கூலி வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. நல்ல சம்பளம் போனஸ் வழங்கப்படும். கல்லர் வேலை தெரிந்தவர்களுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும். மாப்பியன் மில், மானிப்பாய், சுதுமலை. 1859

நவாலி கிழக்கு ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு முகாமையாளர் தேவை. காசுப்பிணை ரூபா 750/- ஆதனப்பிணை ரூபா 2000/- விபரங்களுக்குத் தலைவருக்கு விண்ணப்பிக்கவும். நவாலி கிழக்கு, மானிப்பாய். 1862

கொமிஷன் அடிப்படையில் வேலை செய்வதற்கு கன்வஸ்சேஸ் (Canvassers) தேவை. நேரில் சந்திக்கவும் பிரமன்ஸ் லிமிட்டெட், 2 ம் மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம், ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 1864

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடுகள்: 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளுக்கு முதலாம் தவணை வழிகாட்டிக்குஅமைவாக புதுமுறை மாதிரிகை வினக்கள், வின—விடைகள் எல்லாப் பாடங்களுக்கும் தனித்தனியாக வெளிவந்துள்ளன. ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை, 213 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 1865

வீடும் வளவும்:

7 பரப்பு, 5 அறைகளுடன் முழு வசதியும் அடங்கிய வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். வி. மகேந்திரன், நரியிட்டான், மல்லாகம். 1863

### தவறிவிட்டன

கூப்பன்கள்:

R 438547 இலக்கத் தொடருடைய 7 கூப்பன்கள் திங்கட்கிழமை கச்சேரி நல்லூர் ரேட்டில் தவறிவிட்டன, கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 1867

### WANTED

Repuired immediately one experienced Foreman for service station. One salesman for MOTOR SPARES FIRM in

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 19—2—70

344 மீ. அன் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப் பதிவுகள், 8-15 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 செய்திச் சுருக்கம்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு. 5-00 செய்திச் சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி, இரவு 6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 ஐ.நா. சித்திரம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடகஇசை, 10-30 செய்திச்சுருக்கம்.

## இணுவில் இந்து வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

இணுவில் இந்துவிளையாட்டுக்கழக உதைபந்தாட்ட முதலாம் பிரிவு கோஷ்டிக்கும் யாழ் விளையாட்டுக் கழக கோஷ்டிக்குமிடையில் நேற்றைய தினம் இணுவில் எச்சாட்டி மைதானத்தில் நடைபெற்ற ஓர் சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் 5-1 கோல்களினால் வெற்றியீட்டியது.

இணுவில் கோஷ்டி கப்ரின் திரு. செ. இலகுநாதன் 3 கோல்களையும், திரு எ மதுரநாயகம் 2 கோல்களையும் போட்டனர். போட்டி முடிவடைய இரு நிமிடங்கள் இருக்கையில் யாழ் வீரர் திரு சிவராசா ஒரு கோல் போட்டார். ஈற்றில் இந்து(5-1) கோல்களினால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு பெ. கனகசபாபதி மத்தியஸ்தம் வகித்தார். (தே. நி)

### ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

## கொக்குவில் கிராமச் சபை கேள்வி விளம்பரம்

1. 1970-ம் ஆண்டு பங்குனி மாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணி வரை கொக்குவில் கிராமச் சபைத் தலைவரால் கீழ்க் காட்டிய வேலைகளுக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோணாவளை ஆலடி ஒழுங்கை வேலை.

2. கேள்விகள் கிராமச் சபை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படவேண்டும் அல்லது பதிவுத்தபாலில் கிராமச்சபைத் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும், அல்லது 5-3-70-ந் திகதி காலை 10-00 மணிக்கு நடைபெறவிருக்கும் கிராமச் சபைக் கூட்டத்தில் கொடுக்கப்படவேண்டும். கேள்வியைக் கொண்ட காகித உறையில் இடதுபக்க மேல் மூலையில் மேற்படி குறிப்பிட்ட பிரகாரம் வேலைக்கான கேள்வி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்வியின் நகல் பிரதியொன்று காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் மேற்படி குறிப்பிட்ட பிரகாரம் வேலைக்கான கேள்வி நகல் என்று எழுதப்பட்டு யாழ்ப்பாணப் பகுதி உள்ளூராட்சி அதிபருக்கு த. பெ. 19, செயலகம் என விலாசமிட்டு பதிவுத் தபாலில் அதே நேரத்தில் கிடைக்க அனுப்பப்படல் வேண்டும்.

4. ரூபா 25/- கட்டுக்காசு கட்டியதன் பேரில் கி. ச. தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு மட்டும் கிராமச் சபைத் தலைவரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப் படுதல் வேண்டும். கட்டுக்காசு கட்டியதற்கான பற்றுச்சீட்டு கேள்வியுடன் இணைக்கப்படுதல்வேண்டும், பத்திரங்கள் 4-3-1970 மாலை 2-00மணி வரை வழங்கப்படும்.

5. கேள்விகளில் உள்ள மாற்றங்கள் அழித்தல்கள் யாவும் கேள்விக்காரரின் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

6. அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தவறும் கேள்விக்காரர் எவருக்கும் கேள்விக் கட்டுப்பணமான ரூபா 25/- திருப்பிக்கொடுக்

கிரிக்கெட்

# இங்கிலாந்து எம். சி. சி. கோஷ்டி இலங்கைவிஜயம்

## கொழும்பில் 4 நாள் டெஸ்ட்

கொழும்பு, வியா.

உலக கிரிக்கெட் சரித்திரத்தின் அத்தியாயங்களை மாற்றியமைக்கும் வல்லமை பொருந்திய உலகப் பிரசித்தி பெற்ற இங்கிலாந்தின் எம். சி. சி. கிரிக்கெட் கோஷ்டி நேற்று முன்தினம் இலங்கை வந்து சேர்ந்துள்ளது. இக் கோஷ்டி இலங்கை கிரிக்கெட் கோஷ்டியுடன் நாலுநாள் டெஸ்ட் போட்டி ஒன்றில் கலந்து கொள்ளும்.

இவ்விரு கோஷ்டிகளுக்குமிடையிலான நாலுநாள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொழும்பு ஓவல் மைதானத்தில் 20-ம் திகதி தொடங்கி 23-ம் திகதிவரை நடைபெறும்.

இங்கிலாந்து எம். சி. சி. கிரிக்கெட் கோஷ்டியில் உலகப்புகழ் பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் பலர் அங்கம் வகிக்கின்றனர். இக் கோஷ்டிக்கு இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் ரோணி லூயில் தலைமைதாங்குகின்ருர். இவ்வருடம் ஆசிய நாட்டில் தமது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள இக் கோஷ்டியினர், இலங்கையில் மட்டும்தான் நான்கு நாள் டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

எம். சி. சி. கோஷ்டியில் அங்கம் வகிக்கும் வீரர்களின் விபரம் வருமாறு:

ரோணி லூயிஸ்(காப்டன்) ஜியோப் போய்கொட், டி. வில்சன், ஜே. எச். ஹாம்ஷெயர், ஜி. ஆர். ஜே. ரூப், டி. ஜே. ஷெப்பேர்ட், ஆர். டபிள்யூ. டெய்லர், அலன் ஜோன்ஸ், பி. எல். போக்கொக், ஜி. ஜி. ஆர். னேல்ட், கே. டபிள்யூ. ஆர். பிலெட்ஸர், ஆர். எம். சி. கில்லியர்ட், டபிள்யூ. பிலென்கிரன்.

இலங்கைக் கோஷ்டிக்கு திரு. மைக்கல் திசேரா தலைமை தாங்குகின்ருர்.

எம். சி. சி. கோஷ்டியை எதிர்த்து விளையாடும் இலங்கை கோஷ்டியில் அங்கம் வகிக்கும் வீரர்களின் விபரம் வருமாறு:

மைக்கல் திசேரா (காப்டன்) அ[illegible] சாபந்து [illegible] கோன், பி. ரெய்ட், சுனில் வெட்டிமுனி, ரி. டி. கெஹல்கமுவ, அபுபுவாட், மேவின் பீரிஸ், டேவிட் ஹெயின், சிறியாந்தா ராஜபக்ஸ், ஹெபேர்ட் பெர்னாண்டோ,

எம். சி. சி.கோஷ்டி 26-ம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டு மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக், ஹாங்காங் ஆகிய நாடுகளிலும் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளும்.

எம். சி. சி. கோஷ்டி இலங்கை வருவதற்கான சகல ஏற்பாடுகளையும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திரு. சுந்தரம் பத்மநாதன் மேற்கொண்டிருந்தார். (தே. நி)

அகிர்வாகப்பர் சபை

கலைச்சங்கம் நடத்தும் விழாவில்

## சிறந்த இயல், இசை நிகழ்ச்சிக்கு பரிசுகிடைக்கும்

கொழும்பு, புதன்

கல்வி கலாச்சார இலாகாவின் ஆதரவுடன் இலங்கைக் கலைச்சங்கம் மூன்று கலாச்சார விழாக்களை நடாத்த உத்தேசித்துள்ளது. சிறந்த இயல், இசை நாடகம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

தணிக்கைச் சபையாரின் அனுமதியுடன் 1969ல் மேடையேற்றப்பட்ட சிங்கள. தமிழ் நாடகங்கள், நாட்டியநிகழ்ச்சிகள் இப்பொழுது கலைச்சங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றன. 1969க்குரிய தேசியக கலாசாரப் பரிசு பரிசீலனைக்குப் பின் வழங்கப்படும்.

1970ம் ஆண்டு நாடக விழாவுக்கென 36 நாடகங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, ஹவ்லொக்டவுன் தியேட்டரில் பார்வையிடப்பட்டுவருகிறது. நடுவர்குழு மீண்டும் ஒருமுறை பார்த்து ஆராய்ந்தபின் சிறந்த எழுத்தாளர், தயாரிப்பாளர், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த சங்கீதம், சிறந்த ஆடை அலங்காரம் முதலியவற்றிற்குப் பரிசுவழங்கும். இறுதித்தேர்வு 1970 மார்ச் ஏப்ரலில் நடைபெறும்.

கல்வி அமைச்சும், இலங்கைக் கலைச்சங்கமும் இணைந்து அகிலஇலங்கை பாடசாலைகளுக்கான நாடகவிழாவொன்றை மே, ஜூன் மாதங்களில் நடாத்தும் கனிஷ்ட மத்திய. சிரேஷ்ட பாடசாலைகள் என்ற முறையில் நாடகங்கள் ஆராயப்படும். தழுவலாகவோ, மொழி பெயர்ப்பாகவோ அல்லது சொந்தப் படைப்பாகவோ உள்ள நாடகங்கள் நாட்டிய நிகழ்ச்சிகள், கிராமிய நாடகங்கள் ஆகியனவும்இவ்விழாவில்இடம்பெறலாம் இதற்குரிய பரிசுகள் 1970 செப்டம்பரில் வழங்கப்படும்.

## உத்தேச பல்கலைக்கழகம் எங்கே நிறுவுவது?

### இந்துமாமன்றம் மகஜர் சமர்ப்பிக்கும்

கொழும்பு, புதன்

"உத்தேச தமிழ்ப் பல்கலைக் கழகம் எங்கே நிறுவுவது என்பது பற்றி மன்றத்தின் மகஜரை ரோயல் கமிஷனுக்குச் சமர்ப்பிக்க உபகுழு நடவடிக்கை எடுக்க வேண்டும்"

மேற்கண்டதீர்மானம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திற்கூடிய அகிலஇலங்கை இந்துமாமன்றத்தின் செயற்குழுக்கூட்டத்தில் நிறைபியை சமாதான நீதவானக கௌரவ நிதிமந்திரி நியமித்ததற்கு பாராட்டுத்தெரிவிப்பதுடன் 27-3-70 அன்று நடைபெறும் ஆண்டுக் கூட்டத்தில் மாலை தேநீர்விருந்தொன்றுடன்புகைப்படமும் எடுத்து தோத்திரத்தொகுப் புப்புத்தகமும் வெளியிடல்.

— —

## சென்னைக் கோஷ்டி யாழ்

## பச்சிலைப்பள்ளிச் செய்திகள்

—நமது நிருபர்

### தீப்பெட்டித் தட்டுப்பாடு

இப்பகுதியிலுள்ள பல நோக்கக் கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும், தனியார் கடைகளிலும் தீப்பெட்டிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதினல் பொதுமக்கள் மிகுந்த கஷ்டப்படுகின்றனர்.

### இடமாற்றங்கள்

இருகலை அரசினர் தமிழ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியர் பே. எ. ஸ்ரனிஸ்லாஸ் பூண்டுலோயா அரசினர் தமிழ்மகவித்தியாலயத்துக்கும், கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் மாணவ ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி பாலாம்பிகை சிதம்பரப்பிள்ளை வெற்றிலைக்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கும், வெற்றிலைக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆங்கில உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ஆ. தம்பையா வெற்றிலைக்கேணி ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலைக்கும்இடமாற்றம் பெற்றுள்ளனர்.

### முதலிடம்

செம்பியன்பற்றுக் கிராம சபையினரால் நடாத்தப்பெற்ற உள்ளூராட்சி வார 6ம் நாள் நிகழ்ச்சிகள் உடுத்துறை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன. கலை, கதம்ப நிகழ்ச்சிகளில் செம்பியன்பற்று ரோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர் இரண்டு நிகழ்ச்சிகளில் முதலிடங்களைப்பெற்று இரண்டு வெள்ளிக் கிண்ணங்களைப் பெற்றுக்கொண்டனர். செம்பியன்பற்றுக் கிராமசபைத் தலைவர் திரு. சி. முத்தையா தலைமையில் விழா நடைபெற்றது.

— —

## இறுதிப்போட்டி 23-ம் திகதி

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாண அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினல் நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் இறுதியாட்டம் இம்மாதம் 23-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இந்த இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பொலிஸ்கோஷ்டியும் யாழ்ப்பாண மாநகர சபைக் கோஷ்டியும் மோதிக்கொள்

## செய்திச் சுருக்கம்

### விவசாயிகள் கவலை

விஸ்வமடு படித்தவாலிபர் குடியேற்றத்திட்ட விவசாயிகள், நீர்ப்பாசன இலாகாவினர் இதுவரை தமக்கு நீர் வசதி அளிக்காததையிட்டு மிகவும் கவலையடைந்துள்ளனர். நீர்ப்பாய்ச்சுவதற்கு நீர் வசதி அளித்து விஸ்வமடு குளபிரதானவாய்க்காலைதிறந்து விடும்படி இவர்கள் நீர்ப்பாசன இலாகாவினரைக் கேட்டுள்ளனர்.

0 0 0

### கைப்பற்றப்பட்டன

கள்ளத்தனமாகக் கொண்டுவரப்பட்டதென்று கருதப்பட்ட சுமார் 40 இந்திய மணிப்புரி சாறிகள் நிகவரட்டிய கடை வீதியில் வைத்து கைப்பற்றப்பட்டன. இதன் பெறுமதி சுமார் 10 000 ரூபாஎனமதிப்பிடப்பட்டுள்ளது. புலன் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றது.

0 0 0

### வேலைநிறுத்தம் செய்ய தீர்மானம்

அங்கொடைமன நோயாளர் வைத்தியசாலையில் கடமையாற்றும் 54 தாதிமார்கள் எதிர்வரும் 15ம் திகதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்திருக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளை வெளியேற்றினலன்றித் தாம்வேலை செய்யப் போவதில்லை என்றும் இக்கைதிகளால் தமது உயிர்களுக்குக்கூட ஆபத்தேற்படக் கூடிய நிலைமை ஏற்படலாமென்றும் கூறும் இவர்கள்அங்கொடைஆஸ்பத்திரிமன நோயாளர் சிகிச்சைநிலையமோ அல்லது குட்டி சிறைச்சாலையா என்று அதிகாரிகளைக் கேட்கின்றனர்.

— —

## சூதாடினராம் பிணையில் விடுதலை

மட்டுவில் புதன்

கலைவிழா நிகழ்ச்சிகளில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஐந்துபேரை சாவகச்சேரிப் பொலிசார் கைது செய்தனர். மட்டுவில் வடக்கிலுள்ள ஒரு வாசிகசாலை மைதானத்தில் நடைபெற்ற கலைவிழாவில் சூதாட்டமும் இடம்பெற்றுள்ளதாக வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திற்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கையையடுத்து இக் கலைவிழாவுக்குத் திடீரென

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

WANTED

Repuired immediately one experienced Foreman for service station. One salesman for MOTOR SPARES FIRM in Jaffna Town. Security required. Apply stating particulars. Attach testimonials (copies). Apple-Advt. No: 1866 C/o Eelanadu, Jaffna.

1866

வெற்றி யீட்டியது. இப்போட்டிக்கு திரு பெ. கனக சபாபதி மத்தியஸ்தம் வகித்தார். (தே. நி)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
தாலி பாக்கியம்

ராஜா (யாழ்ப்பாணம்) (தினசரி 3 காட்சிகள்)
ரவிச்சந்திரன் - ராஜ்ஶ்ரீ நடித்த
பிறிபோயா, போயா 4 காட்சிகள்
டில்லி மாப்பிள்ளை

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி ஆர் - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப் பெண்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று ''பேசும்படத்தின்'' மூன்று விருதுகள் பெற்ற வெற்றிச்சித்திரம்
(1 சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி) (3) சிறந்த உபநடிகர் (பாலையா)
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்
சிவாஜிகணேசன் பத்மினி
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானா மோகனாம்பாள்
ஈஸ்ட்மென் கலர்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்

று க் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தவறும் கேள்விக்காரர் எவருக்கும் கேள்விக் கட்டுப்பணமான ரூபா 25/- திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

7. மேலதிகமான விபரங்கள் எதுவும் கிராமச்சபைத் தலைவரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

8. கேள்விப் பத்திரங்கள் 4-3-70 திகதிக்குப் பின் கொடுக்கப்படமாட்டா.

தலைவர்,
கொக்குவில் கிராமச்சபை.
கொக்குவில் கிராமச்சபை
அலுவலகம்,
கொக்குவில்,
15-2-1970. 1960

## சீமெந்து தூசியால் பாதிப்பு

பண்டத்தரிப்பு, புதன்

இதுவரை காலமும் வெற்றிலைப் பயிரைப் பாதித்த சீமெந்துத்தூசி தற்போது திராட்சைக் கொடியிலும் படியத் தொடங்கியுள்ளது இதனல் திராட்சைபயிரிடுவோர் அதிக கவலையடைந்துள்ளனர்.

இன்று மட்டும்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
அசோகன் - சரோஜாதேவி
நடித்த
மணப்பந்தல்

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
இங்கோங் - தாராசிங்
நடித்த
மகாபாரதம்
4-00 p.m. Only
A MAN CALLED DAGGER

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M
Poya PrePoya 4 Shows
Frankie Howerd
Sidney James
in
CARRY ON DOCTOR
(Color)

Today only
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Patrick O'neal
Eric Portman
in
ASSIGNMENT TO KILL
(Technicolor)

வகிக்கும் வீரர்களின் விபரம் வருமாறு:

மைக்கல் திசேரா (காப்டன்), அன்ரனி ஓபதா, தயா சாபந்து அனுரா தென்னக்

## ஆசீர்வாதப்பர் சபை தலைவர் இங்கு வந்துள்ளார்

பண்டத்தரிப்பு, புதன்

இலங்கையில் தொண்டாற்றும் புனித ஆசீர்வாதப்பர் சபைத் துறைவிகளின் தொண்டுகளை நேரில் கண்டு செல்வதற்கு மேற்படி சபை தலைவர் மகாவந். பி. யோ. பெடறிச்சி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். ஒருமாதகாலம் இங்கு தங்கி சபையினரின் தொண்டுகளைக் கவனிப்பார். அவுஸ்திரேலியாவிலிருந்து வந்துள்ள இவர் கேரளாவிற்கும் விஜயம் செய்வார்.

குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்''

மேற்கண்ட தீர்மானம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில்கூடிய அகில இலங்கை இந்துமாமன்றத்தின் செயற்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்துக்கு மன்றத் தலைவர் திரு. ச. சோமசுந்தரம் தலைமைவகித்தார். பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மன்றக் கட்டிடக் குழுவின் அபிப்பிராயத்துக்கு இணங்க தர்மகர்த்தாக்களைக் குறிப்பிட்ட காலத்துக்கு நியமிக்க சட்டத்திருத்தம் கொண்டுவரவேண்டும்.

27-3-70 காலை 9-30 மணிககு மன்றத்தின் ஆண்டுக் கூட்டத்தை முழுநாள் நிகழ்ச்சியாக நடாத்துவது.

மன்றப் பொதுச் செயலாளா திரு. ஆ. சின்னத்தம்

தொன்றுடன் புகைப்படமும் எடுத்து தோத்திரத்தொகுப்புப்புத்தகமும் வெளியிடல்.

## சென்னைக் கோஷ்டி யாழ் வருகின்றது

யாழ்ப்பாணம், வியா

சென்னை கிரிக்கெட் தெரிவுக் கோஷ்டி யாழ்ப்பாணம் வருகின்றது. இக்கோஷ்டி யாழ்ப்பாண தெரிவுக கிரிக்கெட் கோஷ்டியுடன் வரும் 25-ம் 26-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஒரு சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளும்.

நொக்கவுட் போட்டியின் இறுதியாட்டம் இம்மாதம் 23-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இந்த இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பொலிஸ்கோஷ்டியும் யாழ்ப்பாண மாநகரசபைக் கோஷ்டியும் மோதிக்கொள்ளும்.

யாழ் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் இந்த இறுதிப் போட்டியில்யாழ்ப்பாண அரசாங்க அதிபர்திரு பிரான்ஸிஸ் பீற்றஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (தே. நி)

சென்னைக் கோஷ்டியில் பாரத டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் பலர் அங்கம்வகிப்பது குறிப்பிடத்தக்கது.

(தே நி)

இடம்பெற்றுள்ளதாக வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திற்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கையையடுத்து இக்கலைவிழாவுக்குத் திடீரென விஜயம்செய்த சாவகச்சேரிப் பொலிஸ்கோஷ்டி சூதாட்டத்தில் கலந்துகொண்டதாக ஐவரைக் கைதுசெய்ததுடன், சூதாட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட பல பொருட்களையும் கைப்பற்றினர். கைதுசெய்யப்பட்ட ஐவரும் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு பின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

# இன்றைய பலன்

மாசிமாதம் 8-ம் திகதி [19-2-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** அறவழியை நாடுவீர்கள். தெய்வசிந்தை மேலோங்கிநிற்கும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும். புண்ணிய யாத்திரை ஒன்றை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

**ரிஷபம்-** பொருள்வரவு உபசாரம். பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

**மிதுனம்-** பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். தற்பெருமைக்காகத் தவறான பாதையில் காலடி எடுத்து வைக்க நேரிடலாம் தொழில்துறையிலும் தயக்கநிலை தென்படும். அவதானம் நன்று.

**கடகம்-** அவசர முடிவின் மூலம் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவீர்கள். மனதில் அமைதி குன்றும். அயலவர்களின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும். அடக்கம் விரும்பத்தக்கது.

**சிம்மம்-** இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம். உரிமைகளைப் பெறுவதில் புதிய பாதை தென்படும். முதியவர்களின் உபதேசம் முன்னேற்றத்துக்கு இடமளிக்கும். புண்ணிய விருப்புக்கும் இடமுண்டு.

**கன்னி-** நினைத்த காரியத்தில் தடையேற்படுவது தவிர்க்கமுடியாததாகும். சிலரின் கண்டனங்களுக்கும் இலக்காகநேரிடலாம்.

**துலாம்-** அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம். பொருள்வரவுக்கும் இடமுண்டு. சிறப்பான தினம்.

**விருச்சிகம்-** அறவழிகளில் மனநாட்டம் செல்லும். தாராளமனப்பான்மையின் மூலமும் பணம் செலவாகும். இளையபிள்ளையால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. மனைவாழ்க்கையிலும் சுவையான சம்பவங்கள் இடம்பெறும்.

**தனுசு-** பகைமூட்டம் வட்டமிடும். வீணான வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில்துறையிலும் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும். கடிதமொன்று கவலையைத் தரலாம் மனத்திடம் வேண்டும்.

**மகரம்-** கனிவான சம்பவங்கள் நடைபெறும். காதலர்களுக்கு கனகுஷியான தினம். சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறும்.

**கும்பம்-** அரசபயத்துக்கு இடமுண்டு. வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ளவேண்டாம். மின்னியல் பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம் செலுத்தவும்.

**மீனம்-** கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை காதலர்கள் எண்ணங்கள் கைகூடும், இனபந்துக்களின் ஆதரவு கிடைக்கும் எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

10,000
மசி-பேர்குசன்
உரிமையாளர் பிழை
விட்டிருக்க முடியாது.



10,000 மசி - பேர்குசன், நாட்டின் ட்ராக்டர்கள் தொகையில் 75% மானவை.

10,000 மசி - போகுசன் உரிமையாளரே இத் ட்ராக்டரின் வேளாண்மைப் பாவனைச் சிறப்புக்கு அத்தாட்சி.

10,000 மசி - பேர்குசன் ட்ராக்டர்கள், பல கோடி ரூபாய் பெறுமதியான பதில் உறுப்புக்கள், கொண்டவை.

10,000 மசி - பேர்குசன். நாடெங்கிலும் இருபத்து மூன்று நிலையங்களில் சேவை வசதி கொண்டுள்ளன.

முதலாவதாக விற்கப்பட்ட மசி - பேர்குசன் இன்றும பாவனையில் உள்ளது. எனவே ... 10,000 மசி - பேர்குசன் உரிமையாளர் பிழை விட்டிருக்க முடியாதே!

பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டட்
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10.
டெலிபோன் 93097.

# அரபுக்கள் நடத்தும் சில்லறைச் சண்டைகளை சகித்துக் கொள்ள முடியாது

## அவர்கள் நிறுத்தும்வரை தொடர்ந்து தாக்குவோம்

### இஸ்ரேல் பிரதம மந்திரி திருமதி மெயர் முழக்கம்

### சமஅந்தஸ்தோடு பேச்சு நடத்த அரபுக்களை அழைக்கிறார்

டெல்அவிவ், பெப்- 18

**எகிப்தியர் தம் வசதிக்கேற்றாற்போல் சில்லறைச் சண்டைகளை நடத்தி வருவதற்கு அனுமதிக்கமுடியாது. இதன்காரணமாகவே இஸ்ரேல் எகிப்துமீது தொடர்ந்து விமானத்தாக்குதல்களை நடத்திவருகின்றது.**

**இவ்வாறு இஸ்ரேல் பிரதம மந்திரி திருமதி கோல்டாமெயர் கூறினார். இஸ்ரேல் ஆட்சிமன்றத்தில் கொள்கைப்பிரகடனம் ஒன்றை அவர் நிகழ்த்தினார்.**

எகிப்தியர் தம்வசதிக்கேற்ப சில்லறைச்சண்டைகளை நடத்திவருவதற்கு அனுமதிக்கமுடியாது. இதற்காகவே எகிப்தின்மீது இஸ்ரேல் தொடர்ந்து விமானத்தாக்குதல்களை நடத்திவருகின்றது என்று பிரதமர் கோல்டாமெயர் குறிப்பிட்டார்.

அரபுக்கள் தாக்குதலை நிறுத்தும் வரை நாமும் ஓயப்போவதில்லை. போர் ஓய்வை நாம் எப்பொழுதுமே கடைப்பிடிக்க தயாராய் இருந்துவருகிறோம்.

ஆனால் எகிப்தியர் தம் வசதிக்கேற்றாற்போல் சிறிய போர் ஒன்றை நடத்திவருவதை அனுமதிக்கமுடியாது என்றார் திருமதி மெயர்.

சம அந்தஸ்துடன் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வரும்படி அவர் அரபு நாடுகளுக்கு அழைப்புவிடுத்தார்.

#### ஈபான் வற்புறுத்தல்

திருமதி மெயரின் கருத்தை இஸ்ரேல் வெளி உறவு அமைச்சர் திரு. ஈபானும் வலியுறுத்தியிருக்கிறார்.

''எமது வாயில் எப்பொழுதுமே பேச்சுவார்த்தைகளுக்காகத் திறந்து தான் கிடக்கின்றது. பேச்சுக்கள் நடத்த நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறோம்'' என்று திரு. ஈபான் குறிப்பிட்டிருக்கிறார்.

பாலஸ்தீன அகதிகள் விஷயம் சம்பந்தமாக சர்வதேச மாநாடொன்றை நடத்தலாம் என்றும் அவர் யோசனை கூறியிருக்கிறார்.

0 0 0

## 'வடபகுதியில் தமிழ் பல்கலைக் கழகம் வேண்டும்'

### தீவுப் பகுதியை சேர்ந்த 7 கிராம சபைகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,வியா

வடபகுதியில் தமிழ்ப்பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என தீவுப்பகுதியைச்சேர்ந்த ஏழு உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் நேற்று பல்கலைக்கழகக் கமிஷன் முன்னிலையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அல்லைப்பிட்டி, நெடுந்தீவு,நயினாதீவு, அனலைதீவு, காரைநகர், நாரந்தனை கிராமசபைகளும் ஊர்காவற்றுறை,பட்டின சபையாரும் மேற்கண்டவேண்டுகோளை விடுத்துள்ளனர்.

மண்டைதீவுக் கிராம சபைத்தலைவர் திரு க. கைலாசபிள்ளை சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளார்: தமிழ்ப் பிரதேசங்களில் பெரும்பான்மையான தமிழ் மாணவர்கள் வடபகுதியிலேயேவசிக்கின்றனர். இதுவரை காலமும் சர்வகலாசாலையில் புகும் தமிழ் மாணவர்கள் வடபகுதியில் தான் பெரும்பான்மையாக இருந்திருக்கின்றனர்பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படும் காணிகள்,கட்டிடங்கள்வசதியாய் இப்பகுதியில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன.

பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் மற்றும் பல சிப்பந்திகளும் விடுதிவசதிகள் போதியளவும்வடபடபகுதியில் இருக்கின்றன அரசாங்கத்தினால் சென்றகாலங்களில்நியமிக்கப்பட்ட கல்விப் பல்கலைக்கழகவிசாரணைக் குழுக்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுதலை வற்புறுத்தியிருக்கின்றன இக்காரணங்களைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் தமிழ் பல்கலைக்கழகம் சீக்கிரத்தில் நிறுவப்படவேண்டும். (மல்லா. நிரு)

வடக்கில் பல்கலைக்கழகம்

## சாவகச்சேரி, நாவற்குழி, வேலணை கிராமசபை தலைவர்கள்

யாழ்ப்பாணம்,வியா

''இலங்கைப் பல்கலைக்கழகம்- யாழ்ப்பாணம்'' என்ற பெயரில் சகல போதனா பீடங்களும் அமைந்த பூரணத்துவமான பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படல் வேண்டும்''. இவ்வாறு வேலணைக்கிராமசபை சார்பில் சாட்சியமளித்த குழுவினர் பல்கலைக்கழக விசாரணைக் குழு முன்னிலையில் தெரிவித்தனர்.

திருவாளர்கள் ஆறுமுகம், அ பொன்னுத்துரை. சி. இராசரத்தினம் ஆகியோர் சாட்சியமளிக்க வந்திருந்தனர்.

இன அடிப்படையில் அமைந்தால், தேசிய ஒருமைப்பாட்டுக்கு முற்றும் விரோத சக்திகளை வளர்ப்பதாகவே முடியும்

கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் நாட்டில் தோன்றிய போது ஒன்று யாழ்ப்பாணத்திலேயே அமைக்கப்பட்டது. கிழக்கில் இது வேண்டும் என அபிப்பிராய பேதம் ஏற்படவில்லை அதே காரணம் அதிலும் படி உயர்ந்த பூரண பல் கலைக்கழகம் யாழ்ப்பாணத்திலே தான் அமைய வேண்டும்.

நாவற்குழி கிராமசபை தலைவர் திரு எஸ் சடாச்சரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சேர் பொன் இராமநாதனின் சொத்துக்களான இராமநாதன், பரமேஸ்வராக் கல்லூரிகள் உடனடியாக யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்க உதவக் கூடியதாக இருக்கின்றது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் காணப்படும் வயல் காணிகளை குறைந்த பணத்தில் பெறலாம். இவற்றை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில்சர்வகலாசாலையை நிறுவுதல் வேண்டும்''.

சாவகச்சேரி நகர சபைத் தலைவர் திரு எஸ் கனகரத்தினம் சாட்சியமளிக்கையில் வடபகுதி தமிழ் மாணவர்கள் பெறும் கஷ்டங்களைப் போக்க வடபகுதியில் பூரணத்துவ பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் எனக் கோரினார். (மல். நி)

## அமைதிப்படை அனுப்ப வல்லரசுகள் ஆலோசனை

மேற்காசியாவில் நிலைமை கடுமையான நடவடிக்கை நாளுக்கு [illegible] சாத்தியமாகும் வருவதை [illegible] தாண்ட் நிருபர்களிடம் கூறினார். ஜெனிவாவில் அமைதியை நிலைநாட்டுவ [illegible] அமைதிப் [illegible]

[illegible] யென்று அவர்கருதுவதாகத் தெரிகின்றது:

மேற்காசியநெருக்கடியில் சம்பந்தப்பட்டுள்ள நாடுகளுடன் தொடர்புகொண்டு [illegible]

### பயங்கர ரயில்விபத்து: 400 பேர் வரை பலி?

லேகோஸ், பெப். 18

வட நைஜீரியாவில் நேற்றிரவு ஏற்பட்ட மிகப் பயங்கரமான ரயில்விபத்தொன்றில் குறைந்தது 400 பேராவது பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். இதுவரை81 சடலங்களை, மீட்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தோண்டி எடுத்திருக்கிறார்கள். இன்னும் ஏராளமான சடலங்கள் புதையுண்டு கிடப்பதாக கருதப்படுகின்றது.

வடநைஜீரியாவில் லங்கலங்கா என்ற இடத்துக்கு அருகில் இந்த விபத்து ஏற்பட்டது. நைஜீரியாவில் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட மிகப்பெரிய விபத்து இதுவென்று கூறப்படுகின்றது. ஈதுல் பெருநாளைக் கொண்டாடிவிட்டு கிராமங்களுக்குத் திரும்பிக்கொண்டிருந்த முஸ்லிம்கள்தான் இந்த விபத்தில் பலியானவர்களாம்.

## பெங்களூரில் மீண்டும் கன்னடர் ஆர்ப்பாட்டம்

சென்னை, பெப். 18

பெங்களூரில் மீண்டும் தமிழர்களுக்கெதிராக கன்னடர்கள் ஆர்ப்பாட்டங்களும், குழப்பங்களும் செய்வதற்கு ஆரம்பித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள தாளவாடி பகுதிக்குள் தடையை மீறிநுழைந்த மைசூர் எம். எல். ஏ. வட்டல் நாகராஜ் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து, பெங்களூரில், தமிழர்களுக்கு எதிராக கன்னடர்கள் கலாட்டா செய்தது தெரிந்ததே.

ஒருவாரகாலம் தொடர்ந்து நடந்த கலவரம், சில நாட்களாக அடங்கியிருந்தது. சனிக்கிழமை மீண்டும் கன்னடர்கள் கலவரம் செய்தார்கள்

ஸ்ரீராமபுரத்தில். ஜெயராமன் என்ற 20 வயது தமிழ் வாலிபர் தையல்கடைவைத்திருக்கிறார். ஏறத்தாழ 60 கன்னடர்கள் சேர்ந்து கொண்டு அவர் கடையை தாக்கினார்கள்.

ஜெயராமன்தாக்கப்பட்டு, படுகாயம் அடைந்தார். அவரது கைக்கெடிகாரம் பிடுங்கப்பட்டது. தையலுக்குவந்திருந்த துணிகளை, கன்னடர்கள் சூறையாடினார்கள்.

பிரகாஷ் நகரில் 'எட்டி பீட்' ரோட்டில் சில கன்னடர்கள் கையில் தடிகளுடனும், சைக்கிள் சங்கிலியுடனும் வந்து அங்கே கடை வைத்திருக்கும் முகமது என்ற மலையாள வாலிபரைத் தாக்கினார்கள்.

அவர் கடையிலிருந்து 48 சோடா பாட்டில்களையும் எடுத்துச் சென்றார்கள்.

ஸ்ரீராமபுரத்தில், ரவீந்திரன் என்ற 27 வயது தமிழ் வாலிபர் டீக்கடை வைத்திருக்கிறார். இரவில் கதவை மூடிவிட்டு, அவர் தூங்கும் போது கடைக்கதவு உடைக்கப்பட்டது.

கன்னடர்கள் உள்ளே நுழைந்து ரவீந்திரனையும், அவரது வேலையாள் அங்கமுத்துவையும், தாக்கினார்கள் கடையில் இருந்த பணம் கொள்ளையடிக்கப்பட்டது. மேலும் பல சாமான்கள் எல்லாம் சூறையாடப்பட்டன.

பிரகாஷ் நகரில் ஸ்ரீனிவாச நாயுடு என்பவரின் வீடு தாக்கப்பட்டது. அதனால் அவரது 2 குழந்தைகள் காயம் அடைந்தனர்.

## கொழும்புத் திட்டத்தின் கீழ் பிரிட்டனின் உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியமளிக்க வந்திருந்தனர்.

இன அடிப்படையில் அமைந்தால், தேசிய ஒருமைப்பாட்டுக்கு முற்றும் கூறியதாவது:

சேர் பொன் இராமநாதனின் சொத்துக்களான இராமநாதன், பரமேஸ்வராக் கல்லூரிகள் உடனடிகள் பெறும் கஷ்டங்களைப் போக்க வடபகுதியில் பூரணத்துவ பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் எனக் கோரினர். (மல். நி)

# "பரமேஸ்வரா கல்லூரியில் பல்கலைக்கழகம் நிறுவலாம்"

யாழ்ப்பாணம், புதன்

''சுமார் 20லட்சம் ரூபாய் சொத்தான நாவலர், மழவராயர் போன்ற பெரியார்களின் தரும சாதனங்களை உபயோகித்து இராமநாதன் பல்கலைக கழகம் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் புதிய சர்வகலாசாலையை அமைக்க அரசாங்கம் முன்வரவேண்டும்''

இவ்வாறு யாழ்ப்பாணம் தீவுப்பகுதி பயிர்ச் செய்கைக்குழுக்களின் சமாஜத்தினர் பல்கலைக் கழக கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தனர்.

திரு. ஏ. கனகசபை தலைமையில் திரு. எஸ். கந்தப்பிள்ளை, திரு. கே. பத்மநாதன். திரு. ரி. திருஞானம் ஆகியோர் சமாஜ சார்பில் சென்றிருந்தனர்.

மேலும் தமது சாட்சியத்தில் இக்குழுவினர் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் தேவையான வசதிகள் இருக்கும் பரமேஸ்வராக் கல்லூரியில் உத்தேச பல்கலைக் கழகத்தை ஸ்தாபிக்கலாம். தற்போது பல்கலைக்கழகங்களில் மாணவர் தொகை 14 000 என அறிகின்ருேம். பல கல்லூரிகளிலும் உயர்தர கல்வி பெறும் மாணவர் தொகையைக் கணக்கிட்டால் பல்கலைக் கழக மாணவர் தொகை மேலும் அதிகரிக்கும், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் மாணவர் நெருக்கடிகளைப் போக்கி வைக்கும். உத்தேசபல்கலைக் கழகம் கலை, விஞ்ஞான, விவசாய, மருத்துவ, தொழில் நுட்ப பீடங்கள் கொண்டதாக விளங்கவேண்டும். பல்கலைக் கழக மூலம் விஞ்ஞான தொழில் நுட்ப கல்வியால் நமது பொருளாதாரத்தையும் வளர்க்கலாம்.

(மல்லா. நிரு.)

# "பல்கலைக்கழகம் தமிழ் மக்களை பிளவுபடுத்தும் சூழ்ச்சி"

## டாக்டர் நாகநாதன் கூறுகிருர்

யாழ்ப்பாணம்,வியா

'நமது நாட்டை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் பல சமூகங்களையும் பிரித்து ஆட்சிபுரிந்தனர். இப்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் இனங்களைத் பிரித்தாளுவதுடன் தமிழ் மக்களை நசுக்கி வருகின்றது. வடக்கு கிழக்கு மாகாண மக்களிடையே பேதங்களை வளர்த்து பிளவு படுத்துவதற்கு பல்கலைக்கழகம் நிறுவும் முயற்சியை இன்றைய அரசாங்கம் கையாளுகின்றது.

நல்லூர் சங்கிலியன்தோப்பில் திங்கட்கிழமை இரவு நடைபெற்ற நல்லூர்த் தொகுதி தமிழரசுக் கட்சிக் கிளைப் பிரதிநிதிகளின் ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் டாக்டர் ஈ. எம். வீ. நாகநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அடுத்த பொதுத்தேர்தல் பற்றிக் கூட்டத்தில் ஆராயப்பட்டு நல்லூர்த்தொகுதியில் கிராமங்கள் தோறும் தமிழரசுக் கிளைகள்அமைக்க 16 பேர் கொண்ட குழுநியமிக்கப்பட்டது.

(மல்லா. நிரு)

# ''வீட்டிலிருந்து கொண்டே மாணவர் பல்கலைக் கழகத்திற்கு செல்லலாம்

யாழ்ப்பாணம், விய

யாழ்ப்பாணத்தில் உயர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டால் ஏழைப் பிள்ளைகளுக்கு பெரும் உதவியாக இருக்கும். அவர்களுக்கு பணக்கஷ்டமும் ஏற்படாது. ஆதலால் இராமநாதன் இந்து தமிழ் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டும்.

பல்கலைக்கழக கமிஷன் முன்னிலையில் சாட்சியமளித்த காரைநகர் கிராம சபைத் தலைவர் திரு. கா. சு. விசுவலிங்கம் தெரிவித்தார்.

திரு.விசுவலிங்கம்சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் உள்ள பிள்ளைகள் பெரும்பாலோர் கூடிய தொகையினர் உயர் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டால் ஆண் பெண் பிள்ளைகள் ஒழுக்கமும் நல்ல நிலை ஏற்படக் கூடியதாக இருக்கும்.

திரு. இராமநாதன் உருவாக்கிய கல்லூரிகளும், அதன் ஏராளமான காணிகள் கட்டிடங்கள் கூடிய வருவாயும் உள்ள சொத்துக்கள் இருக்கின்றன. யாழ் மாவட்டத்திற்குள் வாழும் மாணவர்கள் வீட்டிலிருந்து வந்துபடிக்கக்கூடிய வசதிகள் இருக்கின்றன.

முன்பு எத்தனையோ வருடங்களுக்கு முன் ஆங்கிலேயர் அரசாட்சிசெய்த காலங்களிலும் சுதந்திரம் பெற்ற பின் மேலும் அரசாங்கத்தினரால் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமெனப் பன்முறை தீர்மானித்த மானய நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது

(மல்-நி)

# வல்லரசுகள் ஆலோசனை

மேற்காசியாவில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதைஉத்தேசித்து அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்கு ஐ. நா. அமைதிப் படையை நிறுத்திவைப்பது பற்றி நான்கு வல்லரசுகள் ஆலோசனை நடத்திவருவதாக யுதாண்ட் தெரிவித்திருக்கிருர்.

மேற்காஸியாவில் அமைதியை நிலைநாட்ட ஏதாவது கடுமையான நடவடிக்கையால் தான் சாத்தியமாகும் என்று யுதாண்ட் நிருபர்களிடம் கூறினர். ஜெனிவாவில் டாக்டர் ஜாரிங்கைசந்திக்கப் போவதற்கு முன்பதாக யுதாண்ட் நிருபர்களிடம் பேசினர். வல்லரசுகள் அக்கறை கொள்ளாவிட்டால் மேற்காஸிய பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவது சாத்தியமில்லையென்று அவர்கருதுவதாகத் தெரிகின்றது:

மேற்காஸியநெருக்கடியில் சம்பந்தப்பட்டுள்ள நாடுகளுடன் தொடர்புகொண்டு மீண்டும் அமைதி முயற்சியில் இறங்கும்படி டாக்டர் ஜாரிங்கை யுதாண்ட் ஜெனிவாவில் சந்தித்துக் கேட்டுக் கொள்ளவிருப்பதாகத் தெரிகின்றது.

# அரபு ஏவுகணைத் தளங்கள்மீது இஸ்ரேலியர் கடும் தாக்கு

கெய்ரோவுக்கு அருகிலுள்ள அரபு ஏவுகணைத் தளங்கள் இரண்டின்மீது நேற்று இஸ்ரேலிய விமானங்கள் கடுமையான தாக்குதல்களை நடத்தின. இந்தத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டதாகவும் தெரிகின்றது.

கெய்ரோவுக்கு சுமார் 20 மைல் தொலைவில் இந்தத் தாக்குதல் நடைபெற்றது.

அண்மையில் அரபு உருக்காலையொன்றின்மீது இஸ்ரேலியர் தாக்குதல் நடத்தி எழுபதுபேர் கொல்லப்பட்டதற்கு பின்னர் இப்பொழுது இந்தக் கடும்தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது.

### அரபுக்கள் மூவர்கைது

மேற்கு ஜெர்மனியில் மேலும் மூன்று அரபுக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். யூகோஸ்லாவிய விமானமொன்றில் ஏற முயன்ற இந்த அரபுக்களை விமானி ஏற்றுவதற்கு மறுத்ததைத்தொடர்ந்து மூனிச் விமானநிலையத்தில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இந்தவிமானத்தை ஸிரியாவுக்கு கடத்திச் செல்ல இந்த அரபுக்கள் முயன்றதாகத்தெரிகின்றது.

அண்மையில் இதேவிமான நிலையத்தில் இஸ்ரேலிய விமானம் ஒன்றின்மீது அரபுக்கள் குண்டுகளை வீசியதில் ஒரு இஸ்ரேலிர் கொல்ப்பப்பட்டார். இந்தச்சம்பவம் குறித்து மூன்று அராபியர் கைதுசெய்யப்பட்டனர்.

# நந்தா, சஞ்சீவையா புதிய மந்திரிகள் இந்திரா நடவடிக்கை

புதுடில்லிபெப். 18

பிரதமர் இந்திராகாந்தியின் மந்திரி சபையில் பழைய மந்திரிகள் திரு குல்சாநிலாம் நந்தாவும் திரு. டி. சஞ்சீவையாவும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிருர்கள்.

இவர்கள் இருவரும் இன்று விசுவாசப் பிரமானம் எடுத்துக் கொள்கிருர்கள்.

திரு. நந்தா ரெயில்வே அமைச்சராகவும், திரு. சஞ்சீவையா தொழில் வாய்ப்பு புனர்வாழ்வுத்துறை அமைச்சராகவும் பதவிவகிப்பார்கள். இருவருக்கும் 'கெவினட்' அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது.

பழையஉள்துறைஅமைச்சரான திரு. குல்சாரிலால் நந்தாவுக்கு 72 வயதாகின்றது. திரு. லால்பகதூர் சாஸ்திரி காலமான சமயத்தில் இவர் சிறிது காலம் தற்காலிக பிரதம மந்திரியாக இருந்தார். காமராஜர் திட்டத்தின்மீது மந்திரி பதவியை விட்டார்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இக் கட்டான நிலைமையில் தம்மால் இயன்ற சேவைகளை நாட்டுக்கு நல்கும் நோக்கத்துடனேயே மந்திரிசபையில் சேர்ந்திருப்பதாக திரு, நந்தா நிருபர்களிடம் கூறினர்

ராஜய சபை உறுப்பினராக இருந்துவரும் திரு. சஞ்சீவையாவுக்கு 42 வயதாகின்றது. 1964ல் முதல் தடவையாக மத்திய மந்திரியான இவர் ஆந்திராவின் முதலமைச்சராகவும் இருந்துள்ளார். திரு.சஞ்சீவையா காங்கிரஸ் மகாசபையின் தலைவராகவும் பதவி வகித்திருக்கிருர்.

கப்பட்டது. தையலுக்குவந் காயம் அடைந்தனர்.

# கொழும்புத் திட்டத்தின் கீழ் பிரிட்டனின் உதவி

கொழும்பு. புதன்

1968ம்ஆண்டு, பிரிட்டன் கொழும்புத் திட்டத்தின் கீழ் பொருளாதார உதவியாகவும், தொழில் நுட்ப உதவியாகவும், 68,300,000 பவுண்களைத் தெற்கு, தென் கிழக்காசிய நாடுகளுக்கு வழங்கியுள்ளது. 1950ம் ஆண்டு கொழும்புத் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 1968ம்ஆண்டுவரை பிரிட்டன் வழங்கியமொத்த உதவித் தொகை 569,000,000 பவுண்களாகும்.

தற்பொழுது வெளியாகியுள்ள கொழும்புத் திட்ட ஆலோசனைக் கமிட்டியின் 17வது வருடாந்த அறிக்கையில் மேற்படி பிரிட்டனின் உதவி விபரங்கள் தரப்பட்டிருக்கின்றன. கனடாவில் உள்ள விக்டோரியா நகரில் அண்மையில் நடைபெற்ற கொழும்புத் திட்ட ஆலோசனைக் கமிட்டி மாநாட்டின் போதே 1968ம் ஆண்டிற்கான இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டது

1968ம் ஆண்டில் பொருளாதார உதவியாக மட்டும் பிரிட்டன் 65 100,000 பவுண்களை வழங்கியிருக்கிறது. கொழும்புத் திட்டம் ஆரம்பித்ததிலிருந்து 1968ம் ஆண்டுவரை பிரிட்டன் வழங்கிய மொத்தப் பொருளாதார உதவி 545,000,000 பவுண்களாகும். 1968ம் ஆண்டில் மட்டும் தொழில் நுட்ப உதவியாக பிரிட்டன் 3,200,000 பவுண்களை வழங்கியிருக்கிறது. கொழும்புத் திட்டம் ஆரம்பித்ததிலிருந்து1968ம் ஆண்டுவரை பிரிட்டன் அளித்த மொத்த தொழில் நுட்ப உதவி 23,000,000 பவுண்களாகும்.

1968ம் ஆண்டில் இலங்கை இந்தோனேஷியா இந்தியா போன்ற நாடுகளுடன் பிரிட்டன் புதிய வட்டியில்லாக் கடனுதவி ஒப்பந்தங்களைச் செய்துகொண்டது. 1965ம் ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்து வட்டியில்லாக் கடனுதவித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கொழும்புத் திட்டப் பிராந்திய நாடு

(4-ம் பக்கம் பார்க்க)

# யு. பி. யில் புதிய மந்திரிசபை

புதுடில்லி, பெப். 18

உத்தரப்பிரதேச கூட்டரசாங்கப் புதிய முதல்மந்திரியாக புரட்சிக் கட்சியைச் சேர்ந்த திரு. சரண்சிங் நேற்று கவர்ணர் கோபால ரெட்டியின் முன்னர் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

ஆறு மந்திரிகளும் மூன்று துணைமந்திரிகளும் பதவிப் பிரமாணத்தில் பங்கு கொண்டனர்.

இப்புதிய மந்திரிசபை இம்மாதம் 26ந் திகதி முதன்முதலாகக்கூடும்.

அவசியமான பல துறைகளிலும் பொதுமக்களின் நலனை பாதுகாப்பதே தமது மந்திரிசபையின் கடமையாக இருக்குமென்று உத்தரப் பிரதேச முதல் மந்திரி சரண்சிங் கூறியுள்ளார்.

# காவேரி நீர்ப்பிரச்னையில் தலையிடக் கோரிக்கை

## இந்திராவிடம் கருணாநிதி வற்புறுத்தல்

புதுடில்லி, பெப். 18

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்று பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியை சந்தித்துப் பேசினர்.

மைசூர் மாநிலத்துக்கும் தமிழ்நாடுக்கும்காவேரி தண்ணீர் பங்கீடு சம்பந்தமான பிரச்னையில் தலையிட்டு சமரசஏற்பாடு செய்துவைக்கும்படி திரு. கருணாநிதி மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டதாகத் . தெரிகின்றது.

ஹேமாவதி அணையை மைசூர் அரசாங்கம் காவேரி ஆற்றில் கட்டுவதைத் தடை செய்யும்படி திரு கருணாநிதி மத்திய அரசை வற்புறுத்தியிருப்பதாகவும்தெரிகின்றது'

நான்காவது அபிவிருத்தித் திட்டத்தில் சேலம் உருக்காலையையும் சேர்த்துக் கொள்ளும்படி திரு. கருணாநிதி மத்திய அரசிடம் கேட்டிருக்கிருர்.

உள்துறை மந்திரி திரு. சவான், கைத்தொழில் மந்திரி திரு. பக்ருதீன் அலி அகமத் ஆகியவர்களையும் திரு. கருணாநிதி சந்தித்துப் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நீசர்கள் என்று கருதப்படுகிறவர்கள் இருக்கும் சேரியே ஆண்டவனுக்குப் பிரியமான க்ஷேத்திரம். அத்தகைய சேரியில் இருப்பவர்களுக்காக நூல் நூற்றேமானல் அதுவே பெரிய ஐயமும், பூஜையும் வேள்வியுமாகும். — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 8-ந் திகதி (19-2-70)


## ஆசிரியர் இடமாற்றம்

தீராத பிரச்னையாக இருந்துவரும் ஆசிரியர் இடமாற்றப் பிரச்னைக்கு நிரந்தரமானதொரு தீர்வு காண்பதற்கு புதியதொரு திட்டம் கொண்டுவரப்படவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும் அந்தத் திட்டத்தை சரியானமுறையில் செயல்படுத்தி ஆசிரியர்கள் திருப்தியோடு தமது கடமையைச் செய்யவும் அதன் மூலம் நல்ல மாணவர்கள் உருவாகவும் வழி செய்தால் அதுவே பெரிய காரியம்.

புதிய திட்டத்தின்படி ஓர் ஆசிரியர் விரும்பிய பாடசாலையில் தொடர்ந்து படிப்பிக்க அனுமதி கிடைக்கும். அவர் அங்கிருந்து வேறு பாடசாலைக்குச் செல்லவிரும்பினுல்- அவர் விரும்பும் பாடசாலையில் காலியான இடமிருந்தால் அவருக்கு இடம் வழங்கப்படும். அங்கு காலியான இடமில்லையெனில் அந்தப் பகுதிகளிலுள்ள எந்தெந்தப் பாடசாலைகளில் காலியான இடமிருக்கிறதோ அவற்றின் பட்டியலைக் குறிப்பிட்ட ஆசிரியரிடம் கொடுத்து அவற்றில் அவர் விரும்பிய ஒரு பாடசாலையைத் தெரிவுசெய்து கொள்ள வாய்ப்பளிக்கப்படும். சுருங்கச் சொன்னுல், ''ஆசிரியர்களின் விருப்பத்திற்கிணங்க இடமாற்றம்'' என்பதுதான் இப் புதிய திட்டமாகும்.

சென்ற சில வருடங்களாக ஆசிரியர் இடமாற்றம் ஆசிரியர்களுக்கோ மாணவர்களுக்கோ அல்லது கல்வி அமைச்சுக்குத் தானும் நிம்மதியைக் கொடுக்கக்கூடியதாக இருந்ததில்லை. யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலையில் நீண்டகாலமாகக் கல்வி கற்பித்துவந்த ஓர் ஆசிரியர் திடீரென்று கண்டியில் ஒரு மூலையிலுள்ள பாடசாலைக்கு மாற்றப்படுவதும் கண்டியிலுள்ளவர் யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்பிலுள்ளவர் காலிக்கும் காலியில் உள்ளவர் திருக்கோணமலைக்கும் மாற்றப்படுவதும் கடந்த சில வருடங்களாகப் பின்பற்றப்பட்டுவரும் நடைமுறை. இந்த இடமாற்றத்தினுல் யாருக்கு நன்மையோ! இடமாற்ற உத்தரவுபெற்ற ஆசிரியர்கள் 'லீவு' எழுதி வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பித்துவிட்டு ஆட்சிமன்றப் பிரதிநிதிகளின் தயவை நாடித் திரிவதும் உயர்அதிகாரிகளிடம் செல்வதும் கடந்த காலத்தில் நாடறிந்த விஷயம். இதனுல் ஒரு பாடசாலை மாணவர்கள் மட்டுமல்ல பல பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்பட்டனர். பல ஆசிரியர்களின் குடும்பங்களும் பாதிக்கப்பட்டன. விருப்பமில்லாத இடங்களுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்துவந்ததனுல் ஆசிரியர்கள் தமது பணி ஒரு சேவை என்பதை விடுத்து 'கடமைக்காக' காலத்தை ஒட்ட முற்பட்டனர். கட்டுப்பாடும் ஒழுங்கும் சீர்குலைந்தது; ஆசிரியர், மாணவர் மத்தியில் அமைதி குலைந்தது; கல்வியும் பின் தங்கியது.

ஆனுலும் கூட ஆசிரியர் இடமாற்றத்திட்டத்திலுள்ள குறைகளை ஆராய்ந்துநிவர்த்தி செய்வதற்கு இதுவரை சரியான நடவடிக்கை எடுக்க கல்விஅமைச்சும் அரசாங்கமும் என்ன காரணத்தினுலோ முன்வரவில்லை. இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள ஆசிரியரின் விருப்பத்துக்கிணங்க இடமாற்றம் செய்யும் திட்டம் வரவேற்கத்தக்கது. அதை விரைவில் செயல்படுத்தவேண்டும்.

## பிரஜாவுரிமை

இலங்கை - இந்திய (சிறிமா - சாஸ்திரி) ஒப்பந்தத்தின்படி இவ்வரு[illegible] கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கைப்பிரஜையுமல்[illegible]

## ''அரசாங்க உதவிநிதியை தாராளமாக பயன்படுத்துக''
### மன்னர் மாவட்ட விவசாயிகளிடம் அரசாங்க அதிபர் கோரிக்கை

முசலி, புதன்

''மன்னர் மாவட்டத்துக்கு மத்திய அரசாங்கத்தால் உபஉணவு உற்பத்தித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டபணம் இம்மாவட்ட மக்களால் பாவிக்கப்படாததினுல் திருப்பி அனுப்பப்பட்டது. எனவே மக்களெல்லோரும் நாட்டின் முன்னேற்றத்திற்காக விவசாயம் மீன்பிடித் தொழில், வீட்டுத்திட்டம் போன்றவைகளுக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் பணத்தைதாராளமாகப் பாவிப்பதற்கு முன்வரவேண்டும்.

மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.எஸ்.கதிர்காமநாதன் நானுட்டான் மேற்கு கிராமசபையால் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு அரங்கையும் மேடையையும் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர். கூட்டத்திற்கு நானுட்டான் மேற்குக் கிராமசபைத தலைவர் திரு. சூ. இம்மனுவேல் பிள்ளை தலைமைவகித்தார்.

மன்னர் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தேவரெத்தின டான்போத், எம்.பி. திரு.வி. ஏ. அழகக்கோன், முசலி காரியாதிகாரி திரு.வை.சொக்கலிங்கம் ஆகியோரும் விழாவில் உரையாற்றினர்.

## 'ஆட்டுப்பட்டிக்காணியை நிலமற்றவருக்கு வழங்க முடிவு'
### துன்னலையில் மேலதிக அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம்,புதன்

''துன்னலைதெற்கு தயாநிதி கிராமமுன்னேற்றச் சங்கத்தினரின் விடாமுயற்சியினுல் இக் கிராமத்திலுள்ள ஆட்டுப்பட்டிஎன்னும் காணியை அரசாங்கம் சுவீகரித்து இப் பகுதியில் வாழும் நிலமற்ற சிறுபான்மைத் தமிழர்களுக்கு வழங்கத் தீர்மானித்திருக்கிறது. அத்துடன் அவர்கள் வீடுகட்டிக் கொள்வதற்கு குடும்பத்துக்கு ரூபா 1000 வழங்கவும் அரசாங்கம் யோசித்திருக்கிறது'' என யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு.ஜே. எம். சபாரத்தினம்துன்னலை தெற்கு தயாநிதிகிராமமுன்னேற்றச சங்கநிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

கலீகைக் கந்தசாமியார் கோவில் முன்றலில் கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. நா. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் சங்கத்திற்கு வேண்டிய நிதியுதவியை செய்து தருவதாகவும் சங்கத்தினர் மாதர் சங்கமொன்றை அமைத்து இப் பகுதி மாதர்களுக்கு நெசவு தையற் தொழில்களில் பயிற்சியளிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

சங்கச் செயலாளர் திரு. சி. செல்லையா, ஆண்டறிக்கையை சமர்ப்பித்து பேசுகையில் சமுதாயத்தில் உரிமைமறுக்கப்பட்டோருக்கும் கல்விவசதி குறைந்தருக்கும் வறுமையால் வாடித்[illegible]

ஆரம்பித்துவைக்கப்பட்டது

இறுதியாக நடைபெற்ற கலைவிழாவில் ''சிலம்புச் செல்வி'' ''வில்லங்கம் வேலுப்பிள்ளை'' ''வெளிக்கிடுவீட்டாலை'' ''பணம் இருந்தும்பட்டினி'' ''புருேக்கர்பொன்னையா'' ''தங்கைக்காரி'' என்ற நாடகங்களும் மேடையேற்றப்பட்டன.

## உள்ளூராட்சி விழாக்கள்

### செம்பியன்பற்றில்

பச்சிலைப்பள்ளி, புதன்

செம்பியன்பற்றுக் கிராம சபை உள்ளூராட்சிவார கலை கலாச்சார விளையாட்டுப் போட்டிகள் உடுத்துறை மகாவித்தியாலய மைதானத்தில் செம்பியன்பற்றுக் கிராமசபைத் தலைவர் திரு சி. முத்தையா தலைமையில் நடைபெற்றது விழாவில்வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு அ. அமிர்தலிங்கம் திருமதி ம அமிர்தலிங்கம் ஆகியோர்கலந்து கொண்டு உரையாற்றினர். போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு திருமதி க. துரைரத்தினம் பரிசில்கள் வழங்கினுர்.

### ஒட்டிசுட்டானில்

ஒட்டிசுட்டான், புதன்

ஒட்டிசுட்டான் கிராம சபைத்தலைவ[illegible], ஊழியர்கள்[illegible]

இப்போதுள்ள சட்டப்படி

## நீதிமன்றத்தில் திடீர் சிங்களம் புகுத்த முடியும்
### தமிழ் வழக்கறிஞர்களின் பரிதாப நிலைபற்றி தீவுப்பகுதி எம்.பி.

ஊரதீவு,புதன்

''வல்வெட்டித்துறையிலும் மன்னரிலும் இராணுவ அட்டூழியங்களுக்கு மக்கள் தினமும் இரையாகிக் கொண்டிருக்கிருர்கள். இந்த நிலையை எண்ணி ஒவ்வொரு தமிழ்மக்களும் ஏங்கிக் கொண்டிருக்கிருர்கள். இந்த அவலநிலையைக்கண்டும் தம்பதெனியாப் பிரதிநிதி திரு ஆர். ஜீ. சேனநாயக்கா 'வடபகுதியில் இராணுவத்தை அதிகரியுங்கள்' என்று அரசாங்கத்தைக் கேட்பதில் இருந்தாவது தமிழினம் தனது தற்போதைய நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும்.

இவ்வாறு ஊர்காவற்றுறை எம்.பி. திரு. வ. நவரத்தினம் ஏழாலை தெற்கு சனசமூக சேவைநிலையக்காரியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தமிழர் தமது உரிமைகளைக் கோருவதை சகலமுற்போக்குச் சக்திகளும் அணிதிரண்டு ஆதரிக்கவேண்டும். முன்னைநாள் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களம்மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்ததன் நோக்கம் தமிழர்களை அரசாங்க சேவையிலிருந்து அப்புறப் படுத்துவதற்குத்தான். அரசகருமங்கள் முழுவதையும்சிங்களத்தில் செய்யவிரும்புகின்ற அரசாங்கம் அரை குறை சிங்களம் படித்ததமிழ்வாலிபர்களை வேலைக்கமர்த்தாது முழுக்க மூழுக்க சிங்களத்தில் கருமமாற்றக் கூடியவரையே வேலைக்கமர்த்தும் இதை எமது தமிழ் வாலிபர்கள் நன்குணரவேண்டும்

இன்றைக்கிருக்கின்ற சட்டத்தின்படி நீதியமைச்சர் நினைத்தால்நீதி மன்றங்களை தற்போது ஆங்கிலத்தில் கருமமாற்றுவதை நிறுத்தி சிங்களத்தில் கருமமாற்றும் படிபணிக்கலாம். இங்ஙனமான ஒரு பணிப்புரை நீதி மந்திரியிடம் இருந்து புறப்படும் நேரத்தில் சிங்களப் பகுதியில் வாழ்க்கைநடத்தும் தமிழ் வழக்கறிஞர்கள் தமது தொழிலை இழந்து வடகீழ் மாகாணங்களை நோக்கி வருகின்ற நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இந்த நிலையில் இன்றைய தமிழ்வழக்கறிஞர்கள் வாழ்கிருர்கள்.

ஆட்சிமன்றத்திற்கு வருகின்ற ஒவ்வொரு மசோதாக்களையும் அலசி ஆராய்ந்து பார்க்கும் திறமையுள்ளவர்களையும் எத்தகையவர்கள் தான் வற்புறுத்தினும் நேர்மையை விட்டு சிறிதும் விலகாத நெஞ்சுரம் உள்ளவர்களையும் தான் தமிழினம் ஆட்சி மன்றத்திற்குத் தெரிந்தெடுத்து அனுப்பவேண்டுமென்றுகூறினுர்.

## எழுத்தாளருக்கு ஜே. பி. பட்டம்

மன்னர், புதன்

விடத்தல்தீவைச் சேர்ந்த ஜனுப் எம். பி. எம். முகம்மது காசீம் ஆலிம் சமாதான நீதவானுக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். மன்னர் நீதவான் திரு. திஸநாயக்கா முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனுப் ஆலிம் முன்னர் மேற்கு மூலைக் கிராமசபையின் தலைவராயிருந்தபோது பல கல்விக்கூடங்கள், பள்ளிவாசல்கள், வீதிகள் முதலான பல திட்டங்களையும் செயல்படுத்தினுர். விடத்தல்தீவில் தண்ணீர்த் திட்டத்தை ஆரம்பிக்கப் பெரி[illegible]யாயிருந்தார் இவ[illegible] முயற்சியால் விடத்தல் தீவில் ஒரு வைத்தியசாலையும் அமைக்கப்பட்டது.

[illegible]ருக்கு வழங்கினுர். மன்னர் ஆட்சிமன்ற உறுப்பினரும், முன்னுள் மாவட்ட அரசாங்க அதிபரும் இவரது சமூகத் தொண்டைப் பாராட்டியுள்ளனர். 'இஸ்லாமிய தத்துவார்த்தம்', 'கள்ளத் தோணிக்குத் தீர்ப்பு' 'மன்னர் நாட்டுப் பாடல்கள்' முதலிய நூல்களை ஆக்கி வெளியிட்டுள்ள ஜனுப் ஆலிம் மன்னர்ப் பிரதேச கலைமன்ற உறுப்பினருமாவார்.

## கோப்பாய்

## ஜயாறன் எழுதுவது.

மலேஷிய தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தலைவரான சுவாமி பிரணவானந்தா அவர்கள் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய பல நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, சமய சம்பந்தமான பல சொற்பொழிவுகள் ஆற்றிவிட்டு, இப்போது ஈழம் வந்துள்ளார்கள்.

கனடாவில் மாண்டிரில் நகரிலே சிவானந்த ஆசிரமத்தில் ஒரு சர்வதேச ஆன்மீக மகாநாட்டை சுவாமி விஷ்ணு தேவானந்தர் கூட்டியிருந்தார். இவர் அமெரிக்காவிலே பல இடங்களில் திவ்ய ஜீவன சங்கம் அமைத்து, தனி விமான மூலம் அங்கெல்லாம்சென்று அரிய தொண்டாற்றி, யோகாசனப் பயிற்சிகளை அமெரிக்கருக்கு அளித்து வருகின்றுர். அவர் கூட்டிய அந்த மகாநாட்டில் இந்தியாவிலிருந்து சுவாமி சிதானந்தா, கண்டி ஆசிரமத்தைச் சேர்ந்த சுவாமி சச்சிதானந்தா, மொரீஷியஸ் சுவாமி வேங்கடேசானந்தா, கல்கத்தா சுவாமி ரங்கநாதானந்தா முதலிய பல சாதுக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

பல கனடிய இளம் சாதுக்கள் உச்சிக் குடுமியும் கழுத்தில் ஜபமாலையும் அணிந்து இதில் கலந்துகொண்ட படத்தைப் பார்த்தேன். சுமார் 500 பேர் இம்மகாநாட்டில் ஆர்வத்துடன் கலந்துகொண்டதாகவும் இன்னும் சில வருடங்களிலே அமெரிக்காவிலிருந்து முதல் தரமான யோகிகள் இந்தியா, இலங்கை முதலிய நாடுகளுககு வந்து நமக்கு யோகாசனம் முதலியவற்றைக் கற்பிக்க வந்தால் அதில் வியப்பில்லை என்றுர் சுவாமி. உடலையும் உள்ளத்தையும் தூய்மைசெய்து, ஆன்மீகவழியிலே ஒரு புது விருப்பு மேற்கில் ஏற்பட்டு வருவதாகவும், கிழக்கில் வந்து நமது கலாசாரத்தைப் பயில அவர்கள் மிக ஆர்வம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். ஆனுல் இங்கோ...!

0 0 0

மாண்டிரீல் மகாநாட்டின் போது, சுவாமி தங்கியிருந்த வீடு மின்சார விபத்து ஏற்பட்டு பற்றி எரிந்துவிட்டதாம். சுவாமியின் பாஸ்போர்ட், கடிதங்கள் பணம் எல்லாம் கரியாகிவிட்டன.

வட்டுக்கோட்டையிலிருந்து மக்கள் கவிமணி இராமலிங்கத்தாருக்கு, வாதுவையிலிருந்து தமிழ் மேதையும் ஹோரணை இலிம்பகாமினி வித்யாலய அதிபருமான திரு. டி. டி. நாணயக்காரா, தமிழில் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

''அன்பே சிவம்.

உங்களுடைய கடிதத்தோடு இணைத்திருந்த 'ஈழநாடு' பத்திரிகையின் துண்டை வாசித்து மகிழ்ந்தேன். நீங்கள் எழுதியதை என்றும் நினைக்கிறேன்.

என் பெயருக்கு நீங்கள் சொல்லியிருக்கும் மூன்று விவரங்களை வாசித்து மகிழ்ந்தேன்.

தென்னிந்தியாவில் நாயக்கர் என்ற அரச பரம்பரையில் பிறந்தவர்கள் இலங்கை கடைசி அரசர்களுடைய காலத்தில் இங்கே வந்து குடியேறினுர்கள், அவர்கள் நாளடைவில் சூழ்நிலைக்கு ஏற்றபடி மாறிமாறி இப்பொழுது 'நாணயக்கார' என்ற உருவம் பெற்றது என்பதே என் நோக்கமாகும். அப்படி இருந்தும் சொல்லுக்குக் கருத்து இருந்தால் தான் நல்லது. இவைகளை இங்கே அனுப்புவதற்குச் சிரமம் எடுத்த உங்களுக்கு எனது இதயபூர்வமான நன்றி உரித்தாகுக...' என்று எழுதி, ராஜாஜி கதைகளைத் தாம் சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கின்றுர்.

இம்மாதம் 2ந் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் ''குயில் பாடாத பூம்பொழில்'' என்ற கட்டுரையில், திரு. நாணயக்காராவைப் பற்றியும் ஒரு பந்தி இருந்தது. அதை நறுக்கி அவருக்கு மக்கள் கவிமணி அனுப்பி இருந்ததற்கே மேற்குறித்த அன்புப் பதில் கிடைத்துள்ளதாம்.

நா+நவம். நயம்—நாணயம் என்ற சொல் அமைந்ததாகக் கருதுகிருர் திரு. இராமலிங்கம். முன்னர் தமிழர்களாக இருந்தவர்களிற் பலர் இப்போது சிங்களவர்களாக மாறியுள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது. குண்டுகுண்டாக அழகான தமிழில் அவர் பதில் எழுதியுள்ளதுடன் ''அன்பே சிவம்'' என்றும் எழுதியுள்ளதிலிருந்து அவர்[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கற்பித்துவந்த ஓர் ஆசிரியர் ... கத்தக்கது. அதை விரைவில் செயல்படுத்தவேண்டும்.

## பிரஜாவுரிமை

இலங்கை - இந்திய (சிறிமா - சாஸ்திரி) ஒப்பந்தத்தின்படி இவ்வருடம் ஏப்ரல் மாதம் 30-ந் திகதிக்குள் இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவழி ('நாடற்றவர்கள்') மக்கள் தங்களுடைய தலைவிதியைத் தீர்மானித்துக் கொள்வதற்கு ஏதாவது ஒரு வழியைப் பின்பற்ற வேண்டும். அதாவது இந்தியப் பிரஜாவுரிமைக்கு மனுச் செய்வதா, இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுச் செய்வதா என்று ஒரு தீர்மானத்துக்கு வந்து ஏப்ரல் மாதம் 30-ந் திகதிக்கு முன்னர் மனுச் செய்தேயாகவேண்டும். முன்பொரு தடவை செய்த அதே தவறை இம்முறையும் செய்துவிடக்கூடாது. இனி இது போன்ற சந்தர்ப்பமும் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கைப்பிரஜையுமல்லாமல் இந்தியப் பிரஜையுமல்லாமல் எந்தவித உரிமையும் கிடையாமல் நாடற்றவர்களாக எந்தச் சமயத்திலும் எவரும் மிரட்டி உருட்டக்கூடிய சந்தேகப் பிரஜையாக வாழும் நிலை மாறி இலங்கைப் பிரஜையென்றோ இந்தியப்பிரஜையென்றோ வாழுவதே சிறந்தது.

எனவே இனியும் காலம் தாழ்த்தாது ஒரு தீர்மானத்துக்கு வந்து பிரஜாவுரிமைக்கு மனுச் செய்யவேண்டியது இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு உழைத்தும் உரிமைகளை இழந்தும் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவழியினரான மக்களின் அவசரக் கடமை.

## "திறந்த வெளியரங்கு அமைத்து கலை நிகழ்ச்சிகள் நடத்துக"

### ப. ச. தலைவரிடம் கோரிக்கை

மாவிட்டபுரம், பதன்

''காங்கேசன்துறைப் பட்டினசபை ஒரு திறந்தவெளியரங்கு அமைத்து பௌர்ணமி கலை நிகழ்ச்சிகளை நடத்தி கலை மன்றங்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும்'' என காங்கேசன்துறை இளம் தமிழர் மன்றம் காங்கேசன் துறைப் பட்டினசபைத் தலைவரிடம் கோரியுள்ளது.

மேற்படி மன்றத்தலைவர் கனகசேந்திரா தலைமையில் சென்ற தூதுக்குழு பட்டினசபைத் தலைவருடன் கலை கலாச்சார சமூக விளையாட்டுத்துறை அபிவிருத்திகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தியது. இவர்கள் சமர்ப்பித்தகோரிக்கைகள் சில பின்வருமாறு:

''கலை கலாச்சாரவிளையாட்டுப்போட்டிகள் வைப்பதுடன் மேற்படி சங்கங்கட்கு நிதியுதவியும் அளிக்கவேண்டும். நிர்வாக அலுவல்கள் யாவும் தமிழில் நடாத்த வேண்டும். படிவங்கள் யாவும் தமிழில் இருக்க வேண்டும்.

வட்டாரங்கள் தோறும் இலவச படிப்பகங்களும் குடிநீர்வசதியும் இடம்பெற வேண்டும்.

## இடமாற்றம்

மானிப்பாய்ப் பட்டின சபைக் காரியதரிசி திரு வி. சதாசிவம் சுன்னாகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவுக்கென்று வெளியான செய்தி சரியல்ல.


இன்று மட்டும்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

ஔவையார்

நாளை முதல்

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா நடித்த

காதல் வாகனம்



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


சங்கச் செயலாளர் திரு. சி. செல்லையா, ஆண்டறிக்கையை சமர்ப்பித்து பேசுகையில் சமுதாயத்தில் உரிமைமறுக்கப்பட்டோருக்கும் கல்விவசதி குறைந்தருக்கும் வறுமையால் வாடித் தவிப்போருக்கும் பயன்படவேண்டிய சங்கங்கள் ஒரு சிலருடைய பொழுது போக்கிற்குப் பயன்படுவது வருத்தத்திற்குரியதென்று கூறினார்.

பருத்தித்துறை காரியாதிகாரிதிரு. எஸ். ஜெயகாந்தன் திரு. எஸ். புவிராசசிங்கம், அ. இ. சி. த. மகாசபைத் தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் உட்படமற்றும் பலரும் உரையாற்றினர். உடுப்பிட்டி பாடசாலை பரிசோதகர் திரு. மகேஸ்வர ஐயரால் முதியோர் கல்வி வகுப்பொன்றும் ...

## கொழும்பு

(3-ம்பக்கத் தொடர்ச்சி

களுக்கு 181,000,000 பவுண்கள்வரை பிரிட்டன் கடனுதவியாக வழங்கியிருக்கிறது.

### தொழில் நுட்ப உதவி

1968ம் ஆண்டில் கொழும்புத் திட்டத் தொழில் நுட்ப உதவியாக 3,200,000 பவுண்களை பிரிட்டன் அளித்துள்ளது தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல், நிபுணர் வழங்குதல், தொழில் நுட்ப சாதனங்களை அளித்தல் ஆகியனவும் இதிலடங்கும்.

1968ம் ஆண்டில் மட்டும் கொழும்புத் திட்டத்தின் கீழ் 1702 ஆசிய மாணவர்கள் பிரிட்டனில் பயிற்சி பெற்றனர்கள். அத்துடன் இவ்வாண்டில் சுமார் 800 பயிற்சி இடங்களை ஆசிய மாணவர்களுக்கு பிரிட்டன் வெளி நாடுகளில் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது.

### சாம்ராஜ்யக் கல்வி

கொழும்புத் திட்டத்தின் கீழுள்ள சாம்ராஜ்ய நாடுகளுக்குக் கல்வித்துறை அபிவிருத்திக்கென உதவியை அளித்துவருகிறது. இந்த உதவிகள் சாம்ராஜ்யக் கூட்டுறவுக் கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. 1968ம் ஆண்டில் மட்டும் பிரிட்டன் 620,000 பவுண்கள் பெறுமதியான உதவியைக் கல்வித் துறைக்கு வழங்கியிருக்கிறது.

சாம்ராஜ்யக் கல்வித் திட்டத்தின் இரண்டாவது பெரிய திட்டமாக விளங்குவது சாம்ராஜ்ய ஆசிரியப் பயிற்சி உபகார நிதித் திட்டமாகும். 1968, 69ம் ஆண்டில் 7 இலங்கையர்கள் இத்திட்டத்தின் கீழ் உபகார நிதிச் சலுகைகள் பெற்றனர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

... ரத்தினம் பரிசில்கள் வழங்கினர்.

### ஒட்டிசுட்டானில்

ஒட்டிசுட்டான், புதன்

ஒட்டிசுட்டான் கிராம சபைத்தலைவர், ஊழியர்கள் கிராம மக்கள் சின்னத்தம்பி வித்தியாலய மாணவர் ஆசிரியர், சிவசக்தி சனசமூக நிலையத்தார் ஆகியவர்களின் கூட்டுப்பிரார்த்தனையுடனும், உள்ளூராட்சி கீதத்துடனும் கோலாகலமாக உள்ளூராட்சி வாரவிழா ஆரம்பமாகி நடைபெற்றது. கிராம சபைத் தலைவர், வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் உரையாற்றினர்.

750 அடி நீளம் 12 அடி அகலமான றோட்டு ஒன்றும் சிரமதான மூலம் திருத்தி அமைக்கப்பட்டது.

### ஏழாலையில்

ஏழாலை, புதன்

உள்ளூராட்சிவாரத்தையொட்டி ஏழாலை ஊராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட சகல கோயில்களிலும் விசேஷ பூசைகளும் ஆராதனைகளும் நடைபெற்றன.

''ஒருசமூகம் முன்னேற வேண்டுமானால் அச்சமூகத்தின் மத்தியில் சமய ஒழுக்கம் வளர்ச்சியடையவேண்டும். மக்களை நல்வழியில் வாழவைப்பதற்கும், நல்ல அறவாழ்வை உண்டாக்குவதற்கும் சமய ஒழுக்கமே முக்கிய குறிக்கோளாகும். என கிராமசபைத் தலைவர் திரு. க. சிவகுரு விழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப்பேசுகையில் கூறினார்.

ஊராட்சி மன்றம் திறம்பட வளர்ச்சிடைவதானால் பொதுமக்களும், உறுப்பினர்களும், உத்தியோகஸ்தர்களும் ஊராட்சிமன்ற தலைவருக்கு விசுவாசமாக ஒத்துழைக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

### "விளையாட்டு மைதானமாக்க உதவுக"

கைதடி. புதன்

நாவற்குழிக் கிராமசபையின் துரித முன்னேற்றத்திற்கு நாவற்குழிச் சந்திக் கருகாமையிலுள்ள ஆயிலிப்பிட்டி மயானம் தடையாக இருப்பதாகவும். இம்மயானத்தைக் கிராமசபை விரைவில் விளையாட்டு மைதானமாக்குவதற்குத் தீர்மானித்திருப்பதாயும் எனவே நாவற்குழிச்சந்தியிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள பிணமுருங்கன் மயானத்தைப் பாவிக்குமாறும் நாவற்குழிக் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். சடாட்சரம் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

... பல திட்டங்களையும் செயல்படுத்தினர். விடத்தல்தீவில் தண்ணீர்த் திட்டத்தை ஆரம்பிக்கப் பெரிதும் உதவியாயிருந்தார் இவரது முயற்சியால் விடத்தல்தீவில் ஒரு வைத்தியசாலையும் அமைக்கப்பட்டது.

இவர் ஒரு சிறந்த பேச்சாளரும் எழுத்தாளருமாவர். இவரது பேச்சுத்திறனைக் கண்ட திரு. தொண்டமான் எம். பி. 'தமிழ் முழக்கம்' என்னும் பட்டத்தை இவ...

### 25 வருடத்தின் பின் திருவிழா

மாவிட்டபுரம், புதன்

கீரிமலை அம்மன் கோவில் தேர்விழா இம்மாதம் 9-ம் திகதி நடைபெறவிருக்கிறது. பல ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய தேரில் அன்றையதினம் அம்பாள் வீதிவலம் வருவார்.

25 வருடங்களுக்கு பின் இங்கு திருவிழா நடைபெறுகிறது.

### மலையக மக்களுக்காக உழைத்தவர்

வெள்ளவத்தை, புதன்

''செயலிலும் பேச்சிலும் மலையக மக்களின் நல்வாழ்க்கைக்காகப் பாடுபட்ட செம்மல் திரு இராசலிங்கம் குபேரராக இல்லாதுபோனாலும் தன்னிடமுள்ளதைப் பகிர்ந்து இன்பம் கண்டவர். பாட்டாளி மக்களோடு பாட்டாளித் தோழனாக வாழ்ந்துஅவர்களின் சுகதுக்கங்களில் சம பங்கெடுத்து என்றும் அவர்களது நெஞ்சைவிட்டு நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார்''

இவ்வாறு வழக்கறிஞர் திரு சரவணமுத்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற அமரர் இராஜலிங்கம் நினைவுதினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. கே. சி. தங்கராஜா குத்துவிளக்கேற்றி அமரர் இராஜலிங்கத்தின் படத்திற்கு மலர்மாலை சூட்டிக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

மலையகக்கவிஞர் சக்தி அ. பாலையா வரவேற்புரை கூறினார்.

செனட்டர் நீதிராஜா, திரு. சி. வி. வேலுப்பிள்ளை, திரு. வேலழகன், திரு மணவைத்தம்பி, பெரியார் இராசாமி உட்படப் பலரும் உரையாற்றினர். விழாவில் நடனவிருந்தளித்த செல்வி சுகிர்தா சின்னத்துரைக்கு கொழும்புயோசப் பிறதர்ஸ் அஸ்பளிப்புச் செய்த தங்கப் பதக்கத்தைச் செனட்டர் நீதிராஜா சூட்டிக் கௌரவித்தார்.

... வார்.

## கோப்பாய் செய்திகள்

### கடைகள் திடீர் சோதனை

கோப்பாய், புதன்

கோப்பாய் பொலிஸ்பகுதியினர் விலைக்கட்டுப்பாட்டை மீறி வியாபாரம் செய்யும் கடைச்சொந்தக்காரர் பலரது கடைகளையும் வீடுகளையும் திடீர் பரிசோதனை நடாத்திவருகின்றனர்.

இவர்களது பரிசோதனையின் பயனாக இப்பகுதியில் ஏழு கடைச்சொந்தக் காரர்கள் மீது வழக்குத்தொடரப்பட்டுள்ளது.

0 0 0

### கந்தபுராண விழா

கோப்பாய் திருவருள்தவநெறி மன்றத்தாரால் கந்தபுராண கலாச்சார விழா கொண்டாடப்பட்டது.

சைவப் புலவர் மணி திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை மேற்படி விழாவில் சிறப்புரை நிகழ்த்தினர்.

0 0 0

### வடபகுதி எம்.பி.கள் கவனத்திற்கு

''வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்னையை நேரில் ஆராய்வதற்காக பட்டதாரிகள் வேலைவாய்ப்புப்பணிமனை வடபகுதிக்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகளை வடபகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் செய்ய முன்வரவேண்டும்''

மேற்கண்ட தீர்மானம் அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினரின் விசேஷ கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

0 0 0

### சுற்றுலா

கோப்பாய் நாவலர் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் எதிர்வரும் 20-ம் திகதி சரித்திரச் சுற்றுலாவொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

0 0 0

### கோப்பாய் எம். பி. சுகவீனம்

கோப்பாய் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை சுகவீனம் காரணமாக சிகிச்சை பெறுவதற்கென கொழும்பு சென்றுள்ளார்.

அங்கு அவர் அரசாங்க மருத்துவ மனையொன்றில் தங்கி வைத்திய பரிசோதனை செய்வார்.

மாண்டிரீல் மகாநாட்டின்போது, சுவாமி தங்கியிருந்த வீடு மின்சார விபத்து ஏற்பட்டு பற்றி எரிந்துவிட்டதாம். சுவாமியின் பாஸ்போர்ட், கடிதங்கள் பணம் எல்லாம் கரியாகிவிட்டன. அதிகாலையில் சுவாமிஎழுந்து தியானம் செய்யச்சென்றதால்தான் அவர் உயிர் தப்ப முடிந்ததாகத் தெரிகிறது. தெய்வாதீனமாகத் தப்பிய அவருக்குப் பலரது உதவியும் கிடைத்தது, ஐரோப்பா முதலிய நாடுகளுக்கும் சுற்றுப் பிரயாணம்செய்யமுடிந்துள்ளது.

வத்திகானில் போப் பாண்டவரை நேரில் தரிசித்து அவருடன்பேசிவிட்டு இந்தியா மூலம் இலங்கை வந்து, இப்போது கீரிமலை சிறுப்பர் மடத்தில் தங்கி இருக்கிறார். வயது 60க்கு மேலாகியும் வாலிப உள்ளத்துடன் விளங்கும் சுவாமி அவர்கள் அளவெட்டியில் பிறந்தார்கள். பூர்வாசிரமப் பெயர் பொன்னையா, தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்கு பேசுகிறார் ஈழத்தைச் சேர்ந்த சுவாமிஜியின் அனுபவத்தையும் அருள்வாக்கையும் அடுத்த ஒரு மாதத்தில் இங்கு பலரும் கேட்டுப் பயன்பட நல்ல வாய்ப்புண்டு.

... சிங்களவர்களாக மாறியுள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது. குண்டுகுண்டாக அழகான தமிழில் அவர் பதில் எழுதியுள்ளதுடன் ''அன்பே சிவம்'' என்றும் எழுதியுள்ளதிலிருந்து அவர்களது சைவப் பற்றும் தெரிகிறது. இதுபற்றி ஆராய்ச்சி செய்தால் இங்கு மொழி, சமய வேற்றுமைகளும் வெகுவாக மறையக்கூடும்,

0 0 0

திருக்கேதீச்சரம் புகைவண்டி நிலையத்திற்கு அருகாமையில், திருக்கேதீச்சரம் செல்லும் யாத்திரிகர்கள் தங்குவதற்கு ஒரு மடம் வேண்டுமென்றும், அதற்குக் காணி வேண்டுமென்றும் சபை மூலம் மன்னார் மாவட்ட அதிபருக்கு விண்ணப்பஞ்செய்ததாகவும் அதன் பயனாக வருகிற 22ந் திகதி ஞாயிறு காலை காணி ஒன்று கிடைப்பதாகவும் அதில் அடுத்த வருடத்துக்குள் மடம் அவனருளால் கட்டலாமென்றும் அன்பர் ஏரம்பமூர்த்தி மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார். 0 0 0

பத்தர்கட் கமுதாய பரத்தினை, முத்தனை முடிவொன்றிலா மூர்த்தியை, அத்தனை அணியார் கழிப்பாலையெம், சித்தனைச் சென்று சேருமா செப்புமே. -அப்பர் அடிகள்

## பொது நிறுவனங்கள் அரசியல் கலப்பற்று இயங்கவேண்டும்

— உபசபாநாயகர்

பருத்தித்துறை, புதன்

'பொது நிறுவனங்களில் அரசியல் தலையீடுகள் தோன்றினால், மக்களிடையே பிரிவு மனப்பான்மை ஏற்படுவதுடன், அவ்வித நிறுவனங்கள் கிராம மக்களுக்கான ஆக்க பூர்வமான பணிகளைச் செய்யமுடியாதநிலைமையும் ஏற்படலாம். பொது நிறுவனங்கள் அரசியற் கலப்பற்று இயங்குவதையே நாட்டு முன்னேற்றத்தை இலட்சியமாகக் கொண்ட பெருமக்கள் அனைவரும் விரும்புவர்'.

இவ்வாறு உபசபாநாயகர் திரு மு சிவசிதம்பரம் கட்டைவேலி கிராம முன்னேற்றச் சங்க ஆண்டுவிழாவில் உரைநிகழ்த்தும் போது கூறினார். சங்கத் தலைவர் திரு எஸ். முத்தையா தலைமையில் நடந்த விழாவில் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

''சொந்த நாடின்றி, உலகம்முழுவதும் அலைந்து திரிந்த யூத மக்கள், இஸ்ரேல் என்னும் பாலைவனப் பகுதியைத் தமதாக்கி. குறுகிய காலப்பகுதியில் பொருளாதார முன்னேற்றத்தைக் காணமுடியுமாயின், பூகோள சுவாத்திய நிலைமைகள் சாதகமான எமது நாட்டில் எமது மக்கள் உலகமே அதிசயிக்கத்தக்க சாதனைகளை நிலைநாட்ட முடியும். பாலைவனத்தை சோலைவனமாக்கியது மட்டுமன்றி, தமது சுதந்திரத்தில் தலையிடும் சத்துராதிகளையும் தனியாக நின்று எதிர்க்கக் கூடிய ஆற்றலையும் அவர்கள் பெற்றுள்ளனர். எனவே, கிராம முன்னேற்றச்சங்கங்கள் சிறந்த முறையில் இயங்குமாயின் நாம் பிற நாடுகளை எதிர்பார்த்துக் கையேந்தி நிற்கும் நிலைமை இங்கு ஏற்பட முடியாது''.

இவ் விழாவில் வரணி மகா வித்தியாலய அதிபர் திரு. வி தங்கராசா பேசுகையில், தனிப்பட்ட பகையுணர்ச்சிகள் பொதுப்பணி ஊடுவுவது தடுக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

நியாயவாதி, திரு வி. செல்லத்தம்பி, கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. டி. கந்தசாமி கிராம முன்னேற்ற உத்தியோகத்தர் திரு ஜே. ஜே. தேவசகாயம் ஆகியோரும் உரையாற்றினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org